# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024–2025

### மானியக் கோரிக்கை எண். 53

# உதயநிதி ஸ்டாலின்

இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| I. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | | |
| 1. | முன்னுரை | 1-4 |
| 2. | துறையின் முக்கியச் செயல்பாடுகள் | 4-8 |
| 3. | கண்காணிப்பு | 8-20 |
| 4. | சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முன்னெடுப்புகள் | 20-21 |
| 4.1 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பாய்வுக் கூட்டங்கள் | 21-35 |
| 4.2 | கள ஆய்வில் முதலமைச்சர் | 35-41 |
| 4.3 | மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் மாவட்ட ஆய்வுகள் | 41-42 |
| 4.4 | உங்கள் தொகுதியில் முதலமைச்சர் | 43-50 |
| 4.5 | தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் | 50-53 |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| II. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் | | |
| 1. | முன்னுரை | 55-67 |
| 2. குறுகிய கால பயிற்சித் திட்டம் | | 68-69 |
| 2.1. | தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி வழங்குநர்கள் மூலம் பயிற்சி பெற்றவர்கள் | 70-72 |
| 2.2. | தொழிற்சாலை திறன் பள்ளி | 72-73 |
| 2.3. | அணிதிரட்டல் மற்றும் வேலை வாய்ப்புப் பங்குதாரர் | 74-75 |
| 2.4. | மதிப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கான அங்கீகாரம் (NCVET) | 75-77 |
| 2.5. | தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் (TNASDC) | 77-80 |
| 2.6. | முன் கற்றலின் அங்கீகாரம் (Recognition of Prior Learning – RPL) | 81-83 |
| 2.7. | தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் உள்ள சிறப்பு ஒன்றிணைந்த திட்டங்கள் (Special Convergence Programmes) | 83-95 |
| 2.8. | இளைய தளம் | 95-98 |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 2.9. | அரசுப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு HCL நிறுவனத்தின் மூலம் சிறப்புத் திறன் பயிற்சி அளித்தல் | 98-102 |
| 2.10. | வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் பெறுதல் மற்றும் அறிவு விழிப்புணர்வுத் திட்டம் (SANKALP) | 103-111 |
| 3. நான் முதல்வன் | | 111-114 |
| 3.1. | நான் முதல்வன் வெற்றி | 114-115 |
| 3.2. | பொறியியல் கல்லூரிகளுக்கான "நான் முதல்வன்" திட்டம் | 115-122 |
| 3.3. | கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான "நான் முதல்வன்" திட்டம் | 123-129 |
| 3.4. | பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கான "நான் முதல்வன்" திட்டம் | 129-134 |
| 3.5. | தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான (ITI) "நான் முதல்வன்" திட்டம் | 135-137 |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 3.6. | வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சித் தொகுப்பு – நான் முதல்வன்” | 138-142 |
| 3.7. | கல்லூரி கனவு | 143 |
| 3.8. | உயர்வுக்குப் படி | 143-145 |
| 3.9. | உலகத் திறன்கள் 2024 | 145-146 |
| 3.10. | நான்முதல்வன் மென்டார்ஷிப் தளம் (Mentorship Portal) | 147-148 |
| 3.11. | நான் முதல்வன்” திறன் பதிவேடு | 148-149 |
| 3.12. | நிரலோட்டம் (Hackathon) மூலம் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தைக் வெளிக்கொணர்தல். | 149-150 |
| 3.13. | நான் முதல்வன் – போட்டித் தேர்வுகள் | 150-155 |
| III. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் | | 157-178 |
| IV. தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் (TNWeSafe) | | 179-190 |
| V. முடிவுரை | | 191-195 |

# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2024-2025

**எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்**

நண்பர், பகைவர், நடுநிலையாளர் ஆகிய எல்லாரிடத்திலும் நிகழும் எல்லா நிகழ்வுகளையும், எல்லாக் காலங்களிலும் ஒற்றரைக் கொண்டு விரைவாக அறிந்து கொள்வது அரசுக்குரிய கடமையாகும்.

**திருக்குறள்-582**

## 1. முன்னுரை

தொலைநோக்கு பார்வை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு சிறப்பான பொருளாதார வளர்ச்சி, மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள், அதிக எண்ணிக்கையிலான கல்வி நிறுவனங்கள் மற்றும் திறன்மிக்க மனித வளங்கள்

போன்றவற்றை கொண்டு நாட்டின் வளர்ச்சி பெற்ற ஒரு மாநிலமாகத் திகழ்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நடத்தப்படும் திராவிட மாடல் அரசானது, பொருளாதாரம் மற்றும் மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டில் மட்டும் முன்னோடியாக இல்லாமல், சமூக நீதி, சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளிப்பதிலும் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. சுருக்கமாகச் சொன்னால் தமிழ்நாடு அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட ஒரு மாநிலமாகும். பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக வளர்ச்சி ஆகிய இரண்டு முக்கிய பரிமாணங்களிலும் சம அளவில் கவனம் செலுத்தியதால் தமிழ்நாட்டின் இத்தகைய வளர்ச்சி சாத்தியமானது. திராவிட மாடல் அரசு அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் மக்களின் நலனை மையமாகக் கொண்ட நிர்வாகத்தை அடிப்படையாக் கொண்ட திட்டங்களைத் உருவாக்கி வருகிறது. சாதி, மத மற்றும் பாலின

வேறுபாடின்றி அனைத்து பிரிவினைரையும் உள்ளடக்கியதே தமிழ்நாட்டின் சிறப்பான வளர்ச்சிக்குக் காரணமாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொலைநோக்குப் பார்வையுடன் ஏற்படுத்தப்பட்ட எண்ணற்ற புதுமையான திட்டங்கள் சமூகத்தில் பின்தங்கியுள்ள மற்றும் விளிம்பு நிலையில் உள்ள மக்களின் வளர்ச்சியை உறுதி செய்துள்ளது. இத்தகைய திட்டங்கள் மாநிலத்தின் நலன் மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை உறுதி செய்யும் அரசின் நடவடிக்கைகளுக்குச் சான்றாக உள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் உருவான இத்திட்டங்கள் பொருளாதாரம், வேளாண்மை, நீர்வளம், கல்வி, சுகாதாரம், ஊரக மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, மற்றும் சமூக நீதி என்ற ஏழு முக்கிய அம்சங்களைப் பெரிதும் கருத்தில் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டங்களின் வெற்றி என்பது திட்டங்களின் முன்னேற்றத்தை முனைப்புடன் தொடர்ந்து கண்காணிப்பதில் உள்ளது. திட்டங்களின் பயன்கள் கடைசி தகுதியுடைய நபருக்கும் சென்றடைய வேண்டும் என்ற உன்னத நோக்கத்தினை உறுதிபடுத்திட வேண்டி, திட்டங்களை உரிய முறையில் கண்காணித்து தேவைப்படும் ஆய்வுகளை அரசளவில் மேற்கொள்ள வழிவகை செய்வது ஆகியவை இத்துறையின் முக்கிய பணிகள் ஆகும்.

## 2. துறையின் முக்கியச் செயல்பாடுகள்

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் பின்வரும் முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

- அரசின் கண்காணிப்பு அமைப்பாகச் செயல்படுவதற்குரிய கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுதல்.

- சட்டமன்றப் பேரவை மற்றும் பல்வேறு அரசு விழாக்களில் வெளியிடப்படும் அனைத்துக் கொள்கை அறிவிப்புகளுக்குத் தேவையான ஆணைகள் வெளியிடப்படுவதைக் கண்காணிப்பதற்கும் அதன் செயலாக்கத்தினைக் கண்காணிக்கவும் சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் அரசின் பல்வேறு முத்திரைத் திட்டங்களைத் தொடர்ந்து கண்காணித்து அதன் முன்னேற்றம் திட்டமிடப்பட்ட இலக்கு மைல்கற்களை அடைவதை உறுதி செய்வதன் மூலம் அவற்றை உரிய காலத்திற்குள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஆவன செய்தல்.
- பல்வேறு துறைகளால் மேற்கொள்ளப்படும் சாலை மற்றும்

மேம்பால பணிகளை அவ்வப்போது ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி கண்காணித்தல்.

- தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் மண்டல அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டத்தை நடத்தி கள அளவில் அரசின் திட்டங்கள் விரைவாக நடப்பதை உறுதி செய்தல்.
- பல்வேறு துறைகளால் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் செயல்படுத்திட திட்டமிடப்பட்ட சேவைகள் உரிய காலத்தில் சென்றடைவதை உறுதி செய்வதற்கு தொடர்புடைய துறைகளுடன் உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களை நடத்துதல்.
- அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களுடன் நடத்தப்படும் மாதந்திர

கூட்டங்கள் மூலம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் கள ஆய்வுகளின் போது கிடைக்கப்பெற்ற விவரங்கள், கருத்துகள் / பரிந்துரைகளின் அடிப்படையில், அரசின் பல்வேறு துறைகள் தங்கள் திட்டங்களில் தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ள உதவுதல்.

- வட சென்னை மக்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக "வட சென்னை வளர்ச்சித் திட்டம்" என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளால் செயல்படுத்திடும் திட்டப் பணிகளையும், முன்னெடுப்புகளையும் சம்மந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைத்தல்.
- சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வீட்டு மனை பட்டா தொடர்பான நடவடிக்கையில் சம்மந்தப்பட்ட

துறைகளை ஒருங்கிணைத்துத் தீர்வு காணுதல்.

- அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் துறைகளுக்கிடையே எழும் சிக்கல்களைச் சம்மந்தப்பட்ட துறைகளை ஒருங்கிணைத்துத் தீர்வு காணுதல்.
- அவ்வப்போது அரசால் இத்துறைக்கு வழங்கப்படும் சிறப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

மேற்குறிப்பிட்ட பணிகளைத் திறம்பட நிறைவேற்றும் பொருட்டு, கள அனுபவம் மற்றும் கள நிபுணத்துவம் கொண்ட அலுவலர்கள், தொடர்புடைய பல்வேறு துறைகளிலிருந்து இத்துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**3. கண்காணிப்பு**

கண்காணிப்பு என்பது தகவல்களை முறையாகச் சேகரித்து, பகுப்பாய்வு செய்து அதன் மூலம் ஒரு திட்டத்தின் முன்னேற்றம் அதன்

இலக்கை நோக்கிப் பயணிப்பதை உறுதி செய்வதோடு, திட்டத்தைச் செம்மைப் படுத்துவதற்குத் தேவையான இடைநிலைத் திருத்தங்களை மேற்கொள்வது உள்ளிட்ட முக்கிய முடிவுகளை வழி நடத்துதல் ஆகும்.

இத்துறை சம்மந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து அரசு அறிவிக்கும் பல்வேறு திட்டங்களின் செயல் நிலைகளைச் சேகரித்துப் பதிவு செய்கிறது. முக்கிய ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கான முன்னேற்ற அறிக்கைகளையும், உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களுக்கானப் பகுப்பாய்வு அறிக்கைகளையும் அவ்வப்போது தயார் செய்கிறது. அவ்வகையில், கண்காணிப்புத் தொடர்பான பின்வரும் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1. கொள்கை அறிவிப்புகளின் கண்காணிப்பு

சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு ஆளுநர் உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள்,

நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மாவட்ட பயணங்களின்போது அறிவிக்கப்படும் மற்றும் இதர அரசு விழாக்களில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் செயலாக்கம் மற்றும் நிறைவேற்றத்தினைக் கண்காணிப்பதே சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முக்கியப் பணியாகும்.

### 3.2 தலைமைச் செயலக உள்வலைய வழி (Intranet) நிகழ்நிலைக் (Online) கண்காணிப்பு

தலைமைச் செயலகத்தில் உள்ள பல்வேறு அரசுத் துறை சார்ந்த கொள்கை அறிவிப்புகளின் முன்னேற்ற நிலையைப் பதிவு செய்வதற்காக

வலைப்பக்கத்தை (Interactive Webpage) இத்துறை வடிவமைத்துத் தலைமைச் செயலக உள்வலைய (Intranet) இணையத்தில் நிர்வகித்து வருகிறது. பல்வேறு வகையான பகுப்பாய்வு அறிக்கைகளைத் தயாரிக்கத் தேவையானக் கண்காணிப்பு மென்பொருளும் வடிவமைக்கப் பட்டுள்ளது. இந்த மென்பொருளில் தேவைக்கேற்ப மாறுதல்கள் அவ்வப்போது இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொடர்புடைய துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து அறிவிப்புகளின் நிலையினை உள்வலைய இணையப் பக்கத்தில் தொடர்ந்து பதிவு செய்திட ஏதுவாக அரசின் அனைத்து நிர்வாகத் துறைகளும், தங்கள் துறை சார்ந்த "தொடர்பு அலுவலர்களை" (Nodal Officers) நியமித்துள்ளன.

நிகழ்நிலை கண்காணிப்பில் பல்வேறு துறைகள் தெரிவிக்கும் முன்னேற்ற

விவரங்களின் அடிப்படையில் அறிவிப்புகளின் செயல்பாட்டு நிலை வகைப்படுத்தப்பட்டு, அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் மாதந்தோறும் நடத்தப்படும் அனைத்துச் செயலாளர்கள் கூட்டங்கள் மற்றும் உயர்நிலை ஆய்வு கூட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

### 3.3 உயர்நிலை ஆய்வுக் கூட்டங்கள்

அரசால் வெளியிடப்படும் பல்வேறு திட்டங்கள் வெற்றி அடைவதை உறுதி செய்வதற்குக் குறிப்பிட்ட கால இடைவெளியில் பல்வேறு நிலைகளில் அதற்கான ஆணைகள் வெளியிடப்படுவதையும் அதன் செயலாக்கத்தையும் ஆய்வு செய்வது மிகவும் அவசியமானதாகும்.

குறிப்பாக, அரசின் பல்வேறு நலத்திட்டங்கள், உட்கட்டமைப்பு திட்டங்கள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும்

பல்வேறு தரப்பினருக்கான வாழ்வாதார மேம்பாட்டிற்காகக் கடனுதவி வழங்குதல் போன்ற திட்டங்களின் பலன் உரிய பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்வதன் மூலமாக மாநிலம் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை அடையும்.

எனவே, இத்துறை அறிவிப்புகளுக்கான உரிய ஆணைகள் வெளியிடப்படுவதையும் அவை செயல்படுத்தப்படுவதையும் உறுதி செய்ய உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களை நடத்துகிறது. இதன் மூலமாக அறிவிப்புகள் கள அளவில் செயல்படுத்தப்படுவதையும் அவற்றின் நோக்கங்கள் நிறைவேறுவதையும் உறுதி செய்ய முடிகிறது.

கீழ்க்கண்ட உயர்நிலை ஆய்வுக் கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அரசுத்துறை செயலாளர்களுடன் கொள்கை அறிவிப்புகளின் செயல்பாடுகள், முத்திரை திட்டங்கள், சாலை மற்றும் பாலப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பிலுள்ள சிக்கல்கள் குறித்தும் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாவட்டங்களில் “கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற திட்டத்தின் மூலம் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து கள அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகிறது.
- மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் மாவட்டங்களில்

மேற்கொள்ளப்படும் கள ஆய்வுகளாலும் மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டங்களாலும் திட்டங்கள் விரைவாகவும் தரமாகவும் செயல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

- அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது.
- தலைமைச் செயலாளர் அவர்களால் அரசின் திட்டங்கள் களஅளவில் செயல்படுத்தப் படுவதை உறுதி செய்யவும், மண்டல / மாவட்ட அளவிலான சிக்கல்கள் குறித்து விவாதிக்கவும் மண்டல அளவில் மாவட்ட ஆட்சியர்களுக்கான ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகிறது.
- அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் துறை சார்ந்த ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகிறது.

- தேவைப்படும் நிகழ்வுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்தால் துறைக்களுக்கிடையேயான ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள உயர்நிலை ஆய்வுக்கூட்டங்களுக்கு தேவையான ஆய்வுக்குறிப்புகள், கையேடுகள், முக்கிய செயல்திறன் குறியீடுகள் (Key Performance Indicators) இத்துறையால் தயார் செய்யப்படுகின்றன.

**3.4. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள்**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள்/ அரசு முதன்மைச் செயலாளர்கள்/ அரசுச் செயலாளர்களை, மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களாக அரசு அவ்வப்போது நியமிக்கிறது. கண்காணிப்பு அலுவலர்கள், மாவட்டத்தில்

செயல்படுத்தப்படும் திட்டங்கள் மீது கள ஆய்வு மேற்கொண்டும், ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், திட்டங்களை விரைவாகச் செயல்படுத்திட தக்க ஆலோசனைகளையும், செயல்படுத்துவதில் ஏற்படும் இடையூறுகளுக்கானத் தீர்வுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட நிலையிலான அலுவலர்களுக்கு வழங்குகின்றனர். அது மட்டுமல்லாமல், ஒவ்வொரு மாதமும் மாவட்டங்களில் சிறப்பு கவனம் செலுத்தப்படவேண்டிய திட்டங்களின் பட்டியல் மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டு, அவர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டங்களில் அத்திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்கின்றனர்.

மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள் மாவட்டங்களில் அவசியமான இனங்களில்

துறைகளுக்கிடையே தேவைப்படும் ஒருங்கிணைத்தல் மற்றும் கூட்டு முயற்சிகளை உறுதி செய்கின்றனர். மேலும் நிலம் கையகப்படுத்துதல் குறித்த சிக்கல்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்தும் ஆய்வு செய்கின்றனர். இவற்றோடு மட்டுமல்லாது அந்த மாவட்டத்திற்கே உரிய சிறப்புத் திட்டங்கள் குறித்தும் ஆய்வு செய்கின்றனர். உயர் அளவில் அறிவுரைகள் வழங்கப்பட வேண்டிய இதர திட்டங்கள் குறித்தும் ஆய்வுகளை மேற்கொள்கின்றனர்.

மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டத்தில் இயற்கை இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள மாவட்டத்தின் தயார் நிலை குறித்தும் மற்றும் புதிய திட்டங்கள் துவங்கப்படும்போது அதற்கான மாவட்டத்தின் தயாரிப்பு நிலை குறித்தும் சிறப்புப் பயணம்

மேற்கொண்டு ஆய்வு செய்கின்றனர். மேலும் தங்களுடைய மாவட்ட கள ஆய்வின் போது அரசு அலுவலகங்களுக்கு நேரடியாகச் சென்று பொது மக்களுக்கு விரைந்து சேவைகளை வழங்கிடுவதையும் உறுதி செய்கின்றனர்.

மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொண்டு திட்டங்கள் வாரியாகத் தங்களின் கருத்துக்கள் / குறிப்புகள் / பரிந்துரைகள் ஆகியவற்றை உரிய தொடர் நடவடிக்கைக்காக இத்துறைக்கு அனுப்புகின்றனர்.

மாவட்டங்களில் திட்டங்களின் செயல்பாடுகள் தொடர்பான கருத்துக்கள் / குறிப்புகள் / பரிந்துரைகள் கண்காணிப்பு அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டு இத்துறையில் ஒருங்கிணைக்கப்பட்டு, அதன் மீது அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது. அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் நடத்தப்படும்

இவ்வாய்வுக் கூட்டத்தில் மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களால் மாவட்டங்களில் ஆய்விடப்பட்ட திட்டங்களின் தொடர்புடைய துறைகளின் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர். இக்கூட்டத்தில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள், தொடர்புடைய துறைகளின் செயலாளர்களிடம் அளிக்கப்பட்டு உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இத்தகைய ஆய்வுக் கூட்டங்கள், கண்காணிப்பு அலுவலர்களால் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாவட்ட அளவில் அடையாளம் காணப்பட்ட இடர்பாடுகளுக்குரிய திருத்தங்கள் மேற்கொள்வதற்கும் தகுந்த தீர்வுகள் எடுப்பதற்கும் வாய்ப்பாக அமைகிறது.

## 4. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முன்னெடுப்புகள்

பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பது மட்டுமல்லாது அரசின் சில

தனித்துவ முன்னெடுப்புகளையும் இத்துறை செயல்படுத்தி வருகிறது. இந்த முன்னெடுப்புகள், பொதுமக்களுக்கு அரசின் பல்வேறு துறைகள் மூலமாக வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கும், அதன் மூலம் அரசின் உயரிய நோக்கமான "எல்லோருக்கும் எல்லாம்" என்ற கோட்பாட்டினை நிறைவேற்றவும் உதவுகிறது.

## 4.1 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பாய்வுக் கூட்டங்கள்

### (அ) முத்திரைத் திட்டங்கள்

மாநிலத்தின் சமூகப் பொருளாதார கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குச் செயல்படுத்தப்படும் பெரிய அளவிலானப் பயன்தரக்கூடிய உள்கட்டமைப்பு திட்டங்களை, குறித்த காலத்திற்குள் திட்டமிட்டபடி நிறைவேற்றுவதற்கும், பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கும் அத்திட்டங்களின்

முன்னேற்றத்தினைத் தொடர்ந்து கவனத்துடன் கண்காணிக்க வேண்டியது அவசியமாகிறது. அதன் மூலம் இத்திட்டங்களில் எதிர்பார்க்கப்படும் பயன்கள் மற்றும் குறிக்கோள்களை உரிய காலத்தில் அடைய இயலும். பல்வேறு முக்கியத் துறைகளின் திட்டங்களான எரிசக்தி, குடிநீர் மற்றும் சுகாதாரம், தொழில் தடங்கள், டைடல் பூங்காக்கள், மேம்பாலம் அமைக்கும் திட்டங்கள், வெளிவட்டச் சாலைகள், பாலங்கள், பாரம்பரிய சின்னங்களைப் பாதுகாக்கும் திட்டங்கள், போக்குவரத்து, தகைசால் பள்ளிகள், சுற்றுச்சூழல் திட்டங்கள், பல்நோக்கு மருத்துமனைகள், மீன்பிடி துறைமுகங்கள், நவீன அரிசி ஆலைகள், சேமிப்புக் கிடங்குகள், தகவல் தொழில்நுட்பத் திட்டங்கள், பாசனத் திட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவை கூர்ந்தாய்வுக்காக உயர்நிலை கூட்டங்களில் முத்திரை திட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் 155 திட்டங்கள் முத்திரை

திட்டங்களாக அடையாளம் காணப்பட்டன. அதற்குப் பின்பு பல புதிய திட்டங்களும் சேர்க்கப்பட்டு தற்போது 25 அரசு நிர்வாகத் துறைகளைச் சேர்ந்த சுமார் 300 திட்டங்கள் முத்திரை திட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் மேற்கண்ட அனைத்து முத்திரை திட்டங்களின் முன்னேற்றங்களையும் சம்மந்தப்பட்ட துறைகளுடன் அத்துறைகளின் மாண்புமிகு அமைச்சர்களுடன் இணைந்து தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறார். இந்தத் தொடர் ஆய்வின் காரணமாக பல திட்டங்கள் விரைந்து முடிக்கப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள, டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை, மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம், மதுரையில் உள்ள உலகப்புகழ் வாய்ந்த

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு அரங்கம், சிவகங்கையில் கீழடி அருங்காட்சியகம் மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் இண்டஸ்ட்ரி 4.0 தரத்திற்கு உயர்த்தல் போன்ற சில திட்டங்கள் இவ்வாறு குறுகிய காலத்திற்குள் முடிக்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஆய்வுகள், பெரிய அளவிலான பணிகளை விரைந்து முடிக்கவும் துறைகளுக்கு உதவுகிறது.

அரசு தலைமைச் செயலாளர் அவர்களும் ஒவ்வொரு மாதமும் முத்திரை திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு இத்திட்டங்களை விரைந்து முடிக்கத் துறைகளுக்கு உரிய அறிவுரைகளை வழங்கி வருகிறார்.

**(ஆ) சாலைகள் மற்றும் பாலங்கள்:**

மாநிலத்தில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 2.71 இலட்சம் கி.மீ. ஆகும். தமிழ்நாட்டின் சாலைகளின் அடர்த்தி 1000 சதுர கி.மீ.க்கு 2084.71

கி.மீ. ஆகும். இது தேசிய சராசரியான 1000 சதுர கி.மீ.க்கு 1926.02 கி.மீ.யை விட அதிகம். இது மாநிலத்தில் சிறப்பான சாலை இணைப்புகள் இருப்பதைக் குறிக்கிறது. வேலைவாய்ப்பு, சமூகம், சுகாதாரம் மற்றும் கல்விச் சேவைகளுக்கு வழிவகை செய்வதில் சாலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பல பகுதிகளை இணைக்கும் சாலைகள் மாநிலத்தின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்குக் காரணியாக அமைகிறது. இந்தக் காரணங்களுக்காகவே, சாலை உள்கட்டமைப்பு இதர பொது சொத்துகளை விட மிகவும் முக்கியமானது. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய மூன்று துறைகளிடமும் மாநிலத்தில் உள்ள சாலைகள் இணைப்பை மேம்படுத்துவது மற்றும் பராமரிப்பது ஆகிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் துறைகளால் மேற்கொள்ளப்படும் பணிகளைக் கண்காணிப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பினை அத்துறைகளே பெற்றிருந்த போதிலும், திட்டச் செயலாக்கத்திற்கு தேவைப்படும் நிலங்கள், வனத்துறையின் ஒப்புதல் போன்ற துறைகளுக்கிடையேயான சிக்கல்களைத் தீர்க்க மாநில அளவில் உயர்நிலை ஆய்வுக் கூட்டங்கள் தேவைப்படுகின்றன. இத்துறை, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் தலைமைச் செயலாளர் அளவில் தேவைப்படும் அத்தகைய உயர்நிலை கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்கிறது.

இதுகுறித்து மேற்கொள்ளப்படும் உயர்மட்ட ஆய்வுகள், தொடர்புடைய துறைகளால் மேற்கொள்ளப்படும் சாலை மற்றும் பாலப் பணிகளை உரிய காலத்திற்குள் முடிக்க உதவுவதோடு, சாலை மற்றும் பாலப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளில்

துறைகளுக்கிடையில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கவும் உதவும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறைகளின் மாண்புமிகு அமைச்சர்களுடன் 2021-22, 2022-23, 2023-24 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்கள் பணிகள் குறித்தும் 2021-22ஆம் ஆண்டுக்கு முன்பு தொடங்கப்பட்டு தற்போது வரை நிறைவடையாமல் தொடர்ந்து நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

அரசின் தலைமைச் செயலர், ஒவ்வொரு மாதமும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்து, எடுக்கப்பட்ட திட்டங்களை விரைந்து முடிப்பதற்கான வழிமுறைகளை வழங்குவதோடு, திட்டங்களை நிறைவேற்றுவதில் துறைகளுக்கு இடையேயான சிக்கல்களையும் தீர்க்கிறார்.

இத்தகைய உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களினால், சாலைப் பணிகள்,

புறவழிச்சாலைகள் மற்றும் பாலங்கள் ஆகியவை விரைந்து முடிக்கப்பட்டன. மேலும் நடைபெற்றுவரும் பணிகளிலும் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் ஏற்பட்டது. மிச்சாங் புயலால் மாநிலத்தின் பல பகுதிகளில் சேதமடைந்த சாலைகளை மீட்டெடுப்பதற்கும் இந்த ஆய்வுகள் உதவியது.

இத்துறை மூன்று துறைகளுடன் ஒருங்கிணைந்து திட்டங்கள் வாரியாகப் பணி முன்னேற்ற அடிப்படையிலும் நிதி முன்னேற்ற அடிப்படையிலும் விவரங்களைச் சேகரித்து அவற்றைத் தொகுத்து ஆய்வுக்கூட்டங்களின் போது வழங்குகிறது.

**(இ) வட சென்னை வளர்ச்சித் திட்டம்**

நமது மாநிலத்திற்குள் துரிதமான பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்தி நமது மாநிலத்தை உலக முதலீட்டு மையமாக

மாற்றுவதே தமிழ்நாடு அரசின் மிக முக்கியமான கொள்கையாகும். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை ஏற்படுத்துவதே மிக முக்கியமானதாகும். நகரங்களில் வளர்ந்து வரும் மக்கள்தொகை மற்றும் உட்கட்டமைப்பு தேவைகளுக்கு ஏற்ப நகரங்களில் நீடித்த நிலையான மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவைப்படுகிறது. சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தென் சென்னை கணிசமான வளர்ச்சியைக் கண்டுள்ளபோது வட சென்னையின் வளர்ச்சியில் உள்ள சவால்களுக்கு ஒருங்கிணைந்த முன்முயற்சிகள் தேவைப்படுகிறது. இத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்யவும் சமமான நகர்புர வளர்ச்சியினை அடைவதற்காகவும் தமிழ்நாடு அரசு “வட சென்னை வளர்ச்சித் திட்டம்“ என்ற திட்டத்தை முன்னெடுத்துள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் உட்கட்டமைப்பில் உள்ள குறைபாடுகள்

மற்றும் வளர்ச்சியில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி சென்னைக்குள் ஒரு சமமான வளர்ச்சியினை ஏற்படுத்துவதேயாகும்.

வட சென்னை மக்களின் தேவைகளைக் கண்டறிந்து மதிப்பீடு செய்வதற்காகச் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகியவை இணைந்து ஆலோசகர்கள் மற்றும் நிறுவனங்களைக் கொண்டு கீழ்கண்ட இரண்டு ஆய்வுகளை மேற்கொண்டது.

1. வட சென்னையின் சமூக பொருளாதார நிலையினை மதிப்பீடு செய்தல் மற்றும் வளர்ச்சி வாய்ப்புகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களைக் கண்டறியும் ஆய்வுகள் - ஆய்வு நடத்தியவர்கள். கால்டுவெல் வங்கி ரிச்சர்டு எலிஸ்(CBRE), சென்னை,

2. சமூக-பொருளாதார-உளவியல் நலன் குறித்த ஆய்வு மற்றும் வட சென்னை பகுதியில் கலந்தாய்வு - இந்த நிகழ்வுகள் சென்னை கிறித்துவ கல்லூரி மற்றும் மகளிர் கிறித்துவ கல்லூரிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுகள் மூலம் சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, உட்கட்டமைப்பு, வீட்டு வசதி மற்றும் பாதுகாப்பு ஆகிய பிரிவுகளில் உள்ள இடைவெளிகள் கண்டறியப்பட்டது. அந்த இடைவெளிகளைக் களைவதற்காக சுகாதாரம் (ம) குடும்ப நலத் துறை, பள்ளிக்கல்வித் துறை, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறப்புத் திட்டச் செயலாக்கம், உயர் கல்வித் துறை தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, இளைஞர் நலன் (ம) விளையாட்டுத் துறை, எரிசக்தி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்

துறைகளின் மூலம் தகுந்த வளர்ச்சித் திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வளர்ச்சிப் பணிகள் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நிதி மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் நிதிகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் முன்னேற்றத்தினை கண்காணித்தல் மற்றும் தொடர்புடைய துறைகளை ஒருங்கிணைத்தல் ஆகிய பணிகளை இத்துறை மேற்கொள்கிறது.

**(ஈ) பட்டா வழங்குதல்**

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் நில உரிமை மற்றும் நில ஆவணங்கள் தொடர்பாக நிலவி வரும் பெரும் சிக்கல்கள் காரணமாக ஆயிரக்கணக்கான குடியிருப்பவர்கள் மற்றும் நில உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஆகிய வாரியங்களிடமிருந்து குடியிருப்புகள் வாங்கி விற்பனை பத்திரம் பெற்றவர்களும் நில வகைப்பாடு, உட்பிரிவு, நில அளவை வேறுபாடுகள் மற்றும் தளவமைப்பு ஆகிய ஆவணங்களில் உள்ள சிக்கல்கள் காரணமாகக் குடியிருப்புவர்களின் நில ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய முடியாமல் உள்ளனர். நில ஆவணங்கள் மற்றும் பட்டா வழங்குவதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்க வேண்டிப் பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் தொடர்புடைய அமைச்சர்களுடன்

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் பட்டா வழங்குவதில் உள்ள சிக்கல்கள் குறித்து ஒரு கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், தொடர்புடைய துறை அலுவலர்களைக் கொண்டு சிறப்புப்பணி அலுவலர் தலைமையில் ஒரு சிறப்புப் பிரிவு ஏற்படுத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தச் செயல்பாட்டில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுப்பணித் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய துறைகள் பங்கு வகிக்கின்றன. சிறப்பு பிரிவுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு பணிகளை விரைந்து முடிக்க வழிவகை செய்திட மாநில

அளவில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த உயர்நிலைக் குழுவிற்கு உதவிடும் வகையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளர் தலைமையில் சிறப்புப்பணி அலுவலரை ஒருங்கிணைப்பாளராகவும், தொடர்புடைய துறைத் தலைவர்கள் உறுப்பினர்களாகவும் கொண்ட பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. சிறப்புப்பணி அலுவலர் தொடர்புடைய துறைகளுடன் இணைந்து சிக்கல்களுக்கான தீர்வு காண்பர்.

### 4.2. கள ஆய்வில் முதலமைச்சர்

கொள்கை அறிவிப்புகள் அனைத்தும் விரைவாக அரசாணைகளாக மாற்றப்பட்டு,

அவைகளைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்து, செயல்பாடுகளைக் கள ஆய்வுகள் மூலம் தொடர்ந்து கண்காணித்து, திட்டங்களின் பயன்கள் அனைத்தும் தாமதமின்றி உரிய மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்வது முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல ஆய்வுக் கூட்டங்களில் வலியுறுத்தி வருகிறார்கள். அரசின் பல திட்டங்களின் முன்னேற்றத்தினை முறையாக ஆய்விடுதல் மட்டுமின்றி, அத்திட்டங்களின் செயலாக்கம் குறித்தும், கள அளவில் நடத்தப்படும் ஆய்வுகளால் மட்டுமே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பெரிதும் வலியுறுத்தப்படும், "மக்களை மையப்படுத்திய அரசு" என்ற நிலையை அடைய இயலும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "கள ஆய்வில் முதலமைச்சர்" என்கிற புதிய முன்னெடுப்பை தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின் கீழ் மண்டல அளவில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு மண்டலமும் 4 முதல் 5 மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

**ஆய்வுக் கூட்டங்கள்**: இத்திட்டத்தின் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்யும் மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களில் நலத்திட்ட மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு துறைகள் சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டங்களை மேற்கொள்கிறார். சட்டம் ஒழுங்கு குறித்த ஆய்வுக் கூட்டமும் தொடர்புடைய மாவட்டங்களின் காவல்துறைக் கண்காணிப்பு அலுவலர்கள், அந்தந்தச் சரகங்களின் காவல்துறைத் துணைத் தலைவர், அம்மண்டலத்தின் காவல்துறைத் தலைவர் ஆகியோருடன் தனியே நடைபெறும்.

**கள ஆய்வுகள்**: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கள ஆய்வுகளை மேற்கொள்கிறார்கள். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நலத்திட்ட மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அரசுச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் அம்மண்டலத்தின் தொடர்புடைய மாவட்டங்களில் ஆய்வுக் கூட்டத்திற்கு முந்தைய நாளில் விரிவான கள ஆய்வினை மேற்கொள்வதுடன் அக்கள ஆய்வின்போது கண்டறியப்பட்ட தகவல்கள் ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்படுகின்றன. மேலும், தேவைப்படும் இடங்களில், கண்டறியப்பட்ட இடையூறுகளைக் களைவதற்குப் பொருத்தமானத் தீர்வுகளும் வழங்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட கூட்டங்களுக்குத் தேவையான விவரங்கள் மற்றும் தரவுகளைத்

தொடர்புடைய துறைகளிடமிருந்து சேகரித்து அதன் அடிப்படையில் ஆய்வுக் குறிப்புகளைத் தயார் செய்யும் பணியினை இத்துறை செய்து வருகிறது. பொதுவாக, கீழ்க்குறிப்பிட்டுள்ள நலத்திட்ட மற்றும் உள்கட்டமைப்பு தொடர்பான இனங்கள் “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ் ஆய்வு செய்யப்படுகின்றன.

- குடிமக்களுக்கு அரசு வழங்கும் அடிப்படை சேவைகள்
- வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி
- சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து
- சமூக நலத் திட்டங்கள்
- வாழ்வாதாரத் திட்டங்கள்
- நகர்ப்புர மேம்பாடு
- பொது உள்கட்டமைப்பு
- மாணவர்கள் மற்றும் இளைஞர்கள்
- திறன் மேம்பாடு
- நில எடுப்பு தேவைப்படும் மாவட்டம் சார்ந்த திட்டங்கள் மற்றும் முத்திரைத் திட்டங்கள்

- மாவட்டத்திற்குரிய கொள்கை அறிவிப்புகளின் செயலாக்க நிலை

மேற்குறிப்பிட்ட இனங்களில் மாவட்ட அளவிலான செயலாக்க முன்னேற்றங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்ய உகந்த வகையில் விரிவான அறிக்கைகளை இத்துறை தயார் செய்து வருகிறது. இந்த ஆய்வறிக்கைகள் மாவட்டங்களில் நன்கு செயல்படும் பகுதிகளைக் குறிப்பிடுவதுடன் மட்டுமல்லாமல் சிறப்பு கவனம் தேவைப்படும் பகுதிகளையும் சுட்டிக்காட்டுகின்றன. இதன் மூலம், தொடர்புடைய மாவட்ட அலுவலர்களால் அப்பகுதிகளில் சிறப்பு கவனம் செலுத்தி, தேவைப்படும் திருத்தங்களை மேற்கொண்டு அப்பகுதிகளில் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கவும் உதவுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுவரை வேலூர், சேலம், மதுரை, விழுப்புரம்,

நாகப்பட்டினம் மற்றும் சென்னை ஆகிய ஆறு மண்டலங்களில் உள்ள 24 மாவட்டங்களுக்கான ஆய்வுக் கூட்டங்களை மேற்கொண்டுள்ளார்கள்.

## 4.3 மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் மாவட்ட ஆய்வுகள்

இந்த அரசு ஏராளமான வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களைப் பல்வேறு துறைகள் மூலமாக மாநிலத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காகச் செயல்படுத்தி வருகிறது. அரசின் திட்டங்கள், கொள்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் உரிய பயனாளிகளைச் சென்று சேருவதற்கு தொடர் கள ஆய்வின் மூலமே சாத்தியப்படும் என்பதை பல்வேறு நிகழ்வுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். இதன் அடிப்படையிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட அளவில் களஆய்வுகளை மேற்கொண்டு அரசினுடைய திட்டங்களின்

பயன்கள் உரிய பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்து வருகிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுவரை 21 மாவட்டங்களை ஆய்வு செய்துள்ளார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட களஆய்வுக்கு செல்வதற்கு முன்னர், இத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள் அந்த மாவட்டத்தில் அரசின் முன்னோடி திட்டங்களின் செயல்பாட்டினை களத்தில் ஆய்வு செய்து அதனடிப்படையிலான அறிக்கையினை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மாவட்ட ஆய்வுக்கு அளித்து வருகிறார்கள். இதுமட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் உயர் அலுவலர்களை ஆய்வு செய்வதற்காக விரிவான ஆய்வறிக்கை இத்துறை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வழங்குகிறது.

## 4.4 உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 07.05.2022 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் விதி எண்.110-ன் கீழ் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற திட்டத்தினை அறிவித்தார்கள். சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மக்களின் நீண்ட காலத் தேவைகளை முன்னுரிமைப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது 22.08.2022 ஆம் நாளிட்ட கடிதத்தில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்கள் தொகுதிகளில் மக்களின் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாத பத்து முக்கியமானக் கோரிக்கைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தில் நெடுங்காலமாக நிறைவேற்றப்படாமல் உள்ள உடனடித் தேவைகளான குடிநீர் வழங்கலுக்கான

கட்டமைப்பு வசதிகள், வேளாண் உற்பத்தியைச் சந்தைப்படுத்துவதற்குரிய பணிகள், இணைப்புப் பாலங்கள் மற்றும் சாலைகள், மருத்துவ வசதிகள், பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்ற புதிய கல்வி நிறுவனங்கள் அல்லது தற்போதுள்ள கல்வி நிறுவனங்களில் தேவைப்படும் கட்டமைப்பு வசதிகள், தொழில் வளர்ச்சியை மேம்படுத்தக் கூடிய கட்டமைப்பு வசதிகள், மின் மயானங்கள், நவீன நூலகங்கள், நகர்ப்புரங்களில் ஒருங்கிணைந்த நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையங்கள் மற்றும் புதிய சுற்றுலாத் தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் பணிகளைப் பரிந்துரை செய்திட கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

இத்திட்டச் செயலாக்கத்திற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் அரசால் 28.09.2022 அன்று வெளியிடப்பட்டன. அவ்வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சட்டமன்ற

உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைப் பட்டியல்களை ஆய்வு செய்திட ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் தொடர்புடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்ட பணிகள்/திட்டங்களைக் கூர்ந்தாய்வு செய்து, அப்பணிகள் எடுத்துக்கொள்வதற்குரிய விரிவான சாத்தியக் கூறுகளை ஆராய வேண்டும். மேற்குறிப்பிட்ட சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் மாவட்ட அளவிலான குழுவில் பணிகள் / திட்டங்கள் ஒவ்வொன்றும் பரிசீலிக்கப்பட்டு தோராய மதிப்பீட்டுத்

தொகையுடன் கூடிய பரிந்துரை அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மேற்கண்டவாறு துறைவாரியாகத் தொகுக்கப்பட்ட பணிகள் / திட்டங்களைச் சம்மந்தப்பட்ட துறைகளின், நடைமுறையில் உள்ள திட்டங்களின் கீழ் செயல்படுத்திடுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்திட ஏதுவாக அரசுத் தலைமைச் செயலாளர் தலைமையில் "கூர்ந்தாய்வு குழு" கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | அரசுத் தலைமைச் செயலாளர் | தலைவர் |
| 2. | அரசு முதன்மைச் செயலாளர்,<br>நிதித் துறை | உறுப்பினர் |
| 3. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை | உறுப்பினர் |
| 4. | அரசுச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | உறுப்பினர் செயலர் |

தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு அனுமதி வழங்கும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கீழ்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு மாநில அளவிலான "அனுமதி வழங்கும் உயர்நிலைக்குழு" அமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு முதலமைச்சர் | தலைவர் |
| 2 | மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் | உறுப்பினர் |
| 3 | மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் | உறுப்பினர் |
| 4 | அரசு தலைமைச் செயலாளர் | உறுப்பினர் |
| 5 | அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை | உறுப்பினர் |
| 6 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை. | உறுப்பினர் |
| 7 | அரசுச் செயலாளர்,<br>சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை | உறுப்பினர்<br>செயலர் |
| 8 | பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் பணிகளுக்குத் தொடர்புடைய துறை சார்ந்த அரசுச் செயலாளர்கள். | உறுப்பினர் |

இத்துறை, மாவட்டங்களிலிருந்து கருத்துருக்களைப் பெற்று அவற்றைத் துறை வாரியாகத் தொகுத்து, அக்கருத்துருக்களை தொடர்புடைய துறைகளுடன் இணைந்து பரிசீலித்து, அவற்றை மாநில அளவிலானக் குழுவின் பரிசீலனைக்கு வைத்திடுதல் மற்றும் அனுமதி வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் ஒருங்கிணைப்புத் துறையாகச் செயல்படுகிறது.

“உங்கள் தொதியில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ் மாவட்டங்களிலிருந்து மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரைகளுடன் பெறப்பட்ட கருத்துருக்கள் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு அவற்றைச் செயலாக்குவது குறித்த சாத்தியகூறு அறிக்கைகள் பெறப்பட்டது.

இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி துறைகளிலிருந்து

பெறப்பட்ட சாத்தியக்கூறு அறிக்கையின்படி "செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்" மற்றும் "2023-24ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் திட்டங்கள்" ஆகியவற்றை இறுதி செய்திட தலைமைச் செயலாளர் தலைமையில் 08.09.2023 அன்று மாநில அளவிலான கூர்ந்தாய்வுக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது.

மேலும், நடைமுறையில் உள்ள திட்டங்களின் கீழ் எடுத்துக்கொள்ள இயலாத கருத்துருக்களை இறுதி செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 07.10.2023 அன்று மாநில அனுமதி வழங்கும் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டில் செயல்படுத்த இறுதி செய்யப்பட்ட பணிகளின் பட்டியல் சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் செயல்படுத்துவதற்காகத் தெரிவிக்கப்பட்டது.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கும் 2023-24ஆம் ஆண்டில் 818 பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு அவற்றின் செயலாக்கம் மாதந்தோறும் அனைத்து துறை செயலாளர்கள் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் அவர்களால் கண்காணிக்கப்படுகிறது. மேலும், உத்தேசமாக 211 பணிகள் 2024-25 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படவுள்ளன.

## 4.5 தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம்

மாநில அரசின் பல முக்கிய மற்றும் முன்னுரிமைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பல்வேறு தொழில் மற்றும் கல்விப் பின்புலத்தைச் சார்ந்த இளம் வல்லுநர்களின் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில், தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இது

தொடர்பாக, அரசாணை (பல்வகை) எண். 3, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, தேதி: 04.03.2022-ன் கீழ் தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் (2022-24) என்கிற திட்டத்தைச் செயல்படுத்துவதற்குரிய ஆணையினை அரசு பிறப்பித்தது. இதன்படி, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையானது இத்திட்டத்திற்கானத் தொடர்புத் துறையாகவும், திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனமானது கல்விப் பங்காளராகவும் அறிவிக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தைச் (2022-24) செயல்படுத்த அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனமானது இளம் வல்லுநர்களைத் தேர்வுச் செய்யும் தொடர்பு முகமையாகும்.

அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தின் கீழ் மூன்று கட்டத் தேர்வுகளின் வழியே புத்தாய்வு வல்லுநர்களைத் தெரிவு செய்யும் பணியினை அந்நிறுவனம் மேற்கொண்டது. வலுவான, வெளிப்படையான மற்றும் நியாயமான முறையில் இந்தத் தேர்வு நடத்தப்பட்டது. இதன் மூலம் தேர்வான 30 நபர்களின் இறுதிப் பட்டியல் 05.09.2022 அன்று வெளியிடப்பட்டது. தேர்வானப் புத்தாய்வு வல்லுநர்களுக்கு மாதம் ரூ.65,000/- ஊதியமும் ரூ.10,000/- கூடுதல் படியும் வழங்கப்படுகிறது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தாய்வு வல்லுநர்கள் பல்வேறு துறைகளுடன், அத்துறைகளின் கொள்கை மற்றும் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக இணைக்கப்பட்டனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தாய்வு வல்லுநர்களில் இரண்டு வருடத் திட்டத்தை (2022-24) வெற்றிகரமாக நிறைவு செய்பவர்கள்,

கல்விப் பங்காளரிடமிருந்து “பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மையில்” முதுகலைச் சான்றிதழ் பெறுவர். மேலும், முதுநிலைப் பட்டங்கள் பெற்றுள்ள புத்தாய்வு வல்லுநர்களுக்குப் பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் முனைவர் பட்டப் படிப்பில் சேர்வதற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியைப் பெற்றிருக்கும் பட்சத்தில் அதற்கான வாய்ப்பினை அந்நிறுவனம் வழங்கும்.

# II. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

## 1. முன்னுரை

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமாக, நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 8 இன் கீழ் நிறுவப்பட்டது. திறமையான தொழிலாளர்களின் வளர்ந்து வரும் தேவையைப் பூர்த்தி செய்யவும், தமிழ்நாட்டை திறன்களின் தலைநகரமாக மாற்றவும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் திறன் தொடர்பான பயிற்சிக்கான முகமையாகச் செயல்படுகிறது. மாநிலத்தின் திறன் மேம்பாட்டு சூழல் அமைப்பை மேம்படுத்துவதன் மூலம் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற மாநிலத்தின் நோக்கத்தினை அடைந்திடவும் தரமான திறன்களை உருவாக்கி முதலீடுகளை

ஈர்த்திடவும் அதிகளவில் இளைஞர்களுக்கு வேலை வாயப்பினை உருவாக்கிடவும் இயலும்.

**உலகளாவிய சூழ்நிலை**

**தொழில்நுட்ப முன்னேற்றங்கள்**

தொழில்துறை 4.0, டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் பசுமை தொழில்நுட்பங்களின் முன்னேற்றங்கள் உலகளவில் வேலை சந்தைகளை மறுவடிவமைத்து வருகின்றன. தொழில்துறை 4.0 ஆனது தன்னியக்கமுறை, செயற்கை நுண்ணறிவு, பொருட்களின் இணையம் (IoT) மற்றும் ஸ்மார்ட் உற்பத்தியை உள்ளடக்கியது. இவற்றால் மேம்பட்ட டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப திறன்களில் சிறந்துள்ள பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். ஜெர்மனி மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் இந்த தொழில்நுட்பங்களைத் தங்கள் உற்பத்தித் துறைகளில் ஒருங்கிணைத்தது உலகளாவிலான திறன் மேம்பாட்டிற்கு அடிப்படை அளவுகோலாக அமைந்துள்ளது. விரிவடைந்து வரும் டிஜிட்டல்

பொருளாதாரம், தரவு அறிவியல், இணையப் பாதுகாப்பு மற்றும் மென்பொருள் மேம்பாடு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெறுவதற்கு வழி வகை செய்து, செயற்கை நுண்ணறிவு நிபுணர்கள், தரவு ஆய்வாளர்கள் மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் நிபுணர்கள் போன்ற புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது. மேலும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் நிலையான நடைமுறைகளை நோக்கிய மாற்றத்திற்கு, டென்மார்க் மற்றும் ஸ்வீடன் போன்ற நாடுகளில் முன்னணியில் உள்ள பசுமைத் தொழில்நுட்பங்கள், ஆற்றல் திறன் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி தேவைப்படுகிறது.

**உலகளாவிய போட்டித்திறன்**

உலகளாவிய போட்டித்திறன் வலுவான தொழிற்பயிற்சி முறைகள் மற்றும் திறன் நகர்வுகளைச் சார்ந்தே உள்ளது. சுவிட்சர்லாந்து மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகள் வகுப்பறை

கல்வியுடன் வலுவான தொழில் நிறுவனங்களில் செயல்முறை பயிற்சியினை அளிக்கும் பயனுள்ள தொழிற் பயிற்சி முறைகளை நிறுவியுள்ளன. இது வாழ்நாள் முழுவதும் கற்பதற்கு வழி வகை செய்கிறது. கூடுதலாக, உலகளாவிய தொழிலாளர் சந்தைகளில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட திறன்கள் தேவை. மொழிப் புலமை, தொழில் சூழலியல் திறன் மற்றும் சர்வதேச சான்றிதழ்கள் ஆகியவை தொழிலாளர்கள் பல்வேறு வேலைச் சந்தைகளுக்கு ஏற்றவாறு தங்களை தகுதிபடுத்த மிக முக்கியமாக உதவுகிறது.

## இந்திய சூழ்நிலை

### தேசிய திறன் மேம்பாட்டு பணி

இந்தியாவின் தேசிய திறன் மேம்பாட்டுத் திட்டம், 2022 ஆம் ஆண்டுக்குள் பல்வேறு துறைகளில் 400 மில்லியன் மக்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் திறமையான பணியாளர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது சமூகத்தில் பின்தங்கிய நிலையில்

உள்ளோரையும் இணைத்து அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை எய்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்தப் பணியின் கீழ் உள்ள முக்கிய திட்டங்களில் பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY)வும் அடங்கும். இது குறுகிய கால பயிற்சி, முன் கற்றல் அங்கீகாரம் மற்றும் திறன் மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டங்களை வழங்குகிறது. துறை திறன் கவுன்சில்கள் (SSCs) திறன் இடைவெளிகளைக் கண்டறிந்து, பல்வேறு தொழில்களுக்கு ஏற்றவாறு தரப்படுத்தப்பட்ட பயிற்சி தொகுதிகளை உருவாக்கி, பயிற்சியானது சந்தைத் தேவைக்கு உட்படுவதையும் உறுதிப்படுத்துகிறது.

**இளம் பணியாளர்களின் எண்ணிக்கை அடிப்படையிலான திறன் பயிற்சிகள்**

இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான இளம் பணியாளர்களின் எண்ணிக்கை

அடிப்படையில் அவர்களுக்குச் சிறப்பான திறன் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியினை எய்த வாய்ப்பு உள்ளது. இருப்பினும், கல்விக்கும் வேலை வாய்ப்புக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதில் சவால்கள் நீடிக்கின்றன, அத்துடன் கிராமப்புற மற்றும் நகர்ப்புற திறன் முயற்சிகளுக்கு இடையே சமமின்மை சவால்களும் நிலவுகின்றன. இந்தச் சவால்களை எதிர்கொள்வது இளம் தொழிலாளர்களின் திறனைப் பயன்படுத்துவதற்கும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை வளர்ப்பதற்கும் முக்கியமானது.

**தமிழ்நாட்டில் திறன்கள்**

**பொருளாதார மற்றும் தொழில்துறை சூழலியல்** :

தமிழ்நாடு தானியங்கி உற்பத்தி, ஜவுளி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணுவியல்

உள்ளிட்ட பல்வேறு தொழில்துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல், குறிப்பாகக் காற்று மற்றும் சூரிய சக்தி ஆகியவற்றிலும் மாநிலம் முன்னணியில் உள்ளது. வளர்ந்து வரும் துறைகளில் கவனம் செலுத்தும் அதே வேளையில் பாரம்பரிய தொழில்களில் உள்ள திறன் இடைவெளிகளை நிவர்த்தி செய்வது சீரான தொழில் வளர்ச்சிக்கு அவசியம். திறன் முயற்சிகள் இந்தத் தொழில்களின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும், பணியாளர்கள் பொருத்தமான மற்றும் புதுப்பித்த திறன்களைக் கொண்டுள்ளதை உறுதிப்படுத்த வேண்டும்.

**அரசின் முயற்சிகள்**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மாநிலம் முழுவதும் திறன் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதில் முக்கியப் பங்காற்றுகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால்

வழங்கப்படும் குறுகிய கால திறன் பயிற்சிகள், நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்களிடையே தொழில்சார் திறன்கள் மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. திறன் மேம்பாட்டிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையை உருவாக்குவதற்கும், பயிற்சித் திட்டங்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் சென்றடைவதை உறுதி செய்வதற்கும் அரசின் முயற்சிகள் உதவுகின்றன.

**கல்வி நிறுவனங்கள்**

தமிழ்நாட்டில் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள், பொறியியல் கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள், தொழில்துறை பயிற்சி நிறுவனங்கள், கலை மற்றும் அறிவியல், துணை மருத்துவக் கல்லூரிகள் போன்ற கல்வி நிறுவனங்களின் வலுவான கட்டமைப்புகள்

அடிப்படை பயிற்சி மற்றும் உயர் தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்குதலில் முக்கிய பங்காற்றுகின்றன. பொருத்தமான மற்றும் தொழில் துறை சார்ந்த பயிற்சி திட்டங்களை உருவாக்குவதற்கு கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு இடையேயான கூட்டமைப்பு அவசியம். உள்ளுரை பயிற்சி மற்றும் பணியிடை பயிற்சி ஆகியவை கற்றலுக்கும் செய்முறை பயிற்சிக்கும் உள்ள இடைவெளியினை சரிசெய்வதில் ஒரு முக்கிய காரணியாகச் செயல்பட்டு பட்டதாரிகள் வேலைக்குத் தயாராக இருப்பதை உறுதி செய்கிறது.

### திறன் பயிற்சி வழங்கப்பட வேண்டிய இனங்கள்

தகவல் தொழில்நுட்பத் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல், தரவுப் பகுப்பாய்வு, மற்றும் இணைய பாதுகாப்பு ஆகிய பயிற்சித்

திட்டங்கள் மிக முக்கியமானவை. மேலும், அனைவருக்கும் டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் அடிப்படை தகவல் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தும் திட்டங்கள் அவசியம். உற்பத்தியில் மேம்பட்ட நுட்பங்கள், ரோபாட்டிக்ஸ் மற்றும் தரக்கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பது மிக அவசியம். முன்னணி உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் சிறப்புத் திறன் பயிற்சிகள் தொழில் துறையின் தேவையைப் பூர்த்தி செய்ய உதவும். சூரிய மற்றும் காற்றாலை ஆற்றல் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் வழங்கப்படும் பயிற்சிகள், மாநிலத்தின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனை மேம்படுத்துகிறது. சுகாதாரப் பராமரிப்பில், ஈடுபட்டுள்ள துணை மருத்துவ ஊழியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பிற நிபுணர்கள் ஆகியோர்களுக்கு உரிய திறன் பயிற்சிகளை வழங்குவது, சுகாதார உள்கட்டமைப்பு மற்றும் தொலைபேசி வாயிலாக மருத்துவம் மற்றும்

சுகாதார தகவல் போன்ற வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களின் வளர்ச்சிக்கு அவசியம்.

**முக்கிய சவால்கள்**

உள்கட்டமைப்பு மற்றும் வளங்களை மேம்படுத்துதல், விழிப்புணர்வு அதிகரிப்பது மற்றும் தொழிற்துறைத் தேவைகளுடன் பயிற்சித் திட்டங்களைச் சீரமைத்தல் ஆகியவை திறன் பயிற்சிகளில் உள்ள முக்கிய சவால்கள் ஆகும். நவீன உபகரணங்கள் மற்றும் தொழில் நுட்பங்களுடன் பயிற்சி வசதிகளை நவீன மயமாக்குதல், தகுதிவாய்ந்த பயிற்சியாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் கிடைப்பதை உறுதி செய்தல் மற்றும் திறன்வளம் குன்றிய பகுதிகளுக்குத் திறன் திட்டங்களை விரிவுபடுத்துதல் ஆகியவை திறன் பயிற்சிகளுக்கு அவசியம். இளைஞர்களிடையே திறன் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பது மற்றும் கிராமப்புற மற்றும்

தொலைதூர பகுதிகளில் அணுகலை உறுதி செய்வது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு முக்கியமானது. கூடுதலாக, தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் தொழில் தரநிலைகளுடன் இருக்க பாடத்திட்டங்களைப் புதுப்பித்தல் அவசியம்.

**தமிழ்நாடு திறன் சூழல் அமைப்பு**

**அனைவருக்கும் திறன் - கடைநிலையினரையும் கண்டடைதல்**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் தற்போதைய நோக்கம், அனைத்து இளைஞர்களுக்கும் ஆற்றலை ஊக்குவிப்பது, அவர்களின் ஆற்றலை வெளிக்கொணர்ந்து, தொழிற்சாலைகளுக்கு ஏற்றத் திறன்களைப் பயிற்றுவிப்பதன் மூலம் அவர்களை வேலைவாய்ப்பிற்கு தகுதியுள்ளவர்களாக மாற்றுவது, பயிற்சி பெற்ற மற்றும் படித்த இளைஞர்களின் திறனை வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தில் மேம்படுத்தி, அவர்களைத்

தொழில்துறைக்கு ஏற்றவர்களாக உருவாக்குதல் மற்றும் பல்வேறு திறன் பயிற்சி முயற்சிகள் மூலம் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான திறன்களை வளர்த்தல், ஆகியவை ஆகும். இவை கீழ்கண்ட பல்வேறு திறன் பயிற்சி முயற்சி மூலம் சாத்தியமாகும்.

- மூன்றாம் தரப்பு பயிற்சி வழங்குநர்கள்/மையங்கள் மூலமாகக் குறுகிய காலத் தொழில் தேவை திறன் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு பெறுவதற்கான உதவி செய்தல்.
- தொழிற்சாலை திறன் பள்ளிகள் (தொழில் பயிற்சி மையமாக) (Factory Skill Schools)
- முன் கற்றலின் அங்கீகாரம் (Recognition of Prior Learning)
- நான் முதல்வன் (முதன்மைத் திட்டம்) – உயர்கல்வித் துறையில் இளைஞர்களைத் திறமைப்படுத்துவதற்கான மிகப்பெரிய திறன் முயற்சி.
- நான் முதல்வன் – போட்டித் தேர்வுகள்

## 2. குறுகிய கால பயிற்சித் திட்டம்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தில் வழங்கப்படும் குறுகிய காலப் பயிற்சிக் கூறுகள், தமிழ்நாட்டில் உள்ள பள்ளி அல்லது கல்லூரி படிப்பைப் பாதியில் நிறுத்தியவர்கள் அல்லது வேலையில்லாத இளைஞர்கள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நபர்களுக்குத் தேவையான திறன்கள் மற்றும் பயிற்சியுடன் அவர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதையும், சிறந்த வேலை வாய்ப்புகளைப் பெற அவர்களுக்கு உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பல்வேறு தொழில்களுக்குத் தொடர்புடைய திறன்களையும் அறிவையும் வழங்குவதன் மூலம் வெற்றிகரமான வாழ்க்கைப் பாதையை உருவாக்க உதவுகிறது.

தேசிய திறன் தகுதி கட்டமைப்பு (NSQF) நிலைகளுடன் கூடிய குறுகிய காலப்

பயிற்சியானது, ஆடை, உடல்நலம், தகவல் தொழில்நுட்பவியல், மின்னணுவியல் மற்றும் வன்பொருள், மூலதனப் பொருட்கள் போன்ற 25க்கும் மேற்பட்ட துறைகள் மற்றும் 150க்கும் மேற்பட்ட பணிகளுடன் தொடர்புடைய திறன் பயிற்சிகள் பெறுவதை உறுதி செய்கிறது.

**அட்டவணை 2.1**

**2023-2024 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கை (தற்போதைய பயிற்சி உட்பட)**

| | |
|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி வழங்குநர்கள் | 26,174 |
| தொழிற்சாலை திறன் பள்ளிகள் | 6,037 |
| அணிதிரட்டல் மற்றும் வேலை வாய்ப்புப் பங்குதாரர் (MPP) | 6,133 |
| உயர் திறன் மேம்பாட்டு மையம் (APEX) | 22,958 |
| முன் கற்றலின் அங்கீகாரம் | 379 |
| சிறப்பு ஒன்றிணைந்த திட்டங்கள் | 30,781 |
| வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் பெறுதல் மற்றும் அறிவு விழிப்புணர்வுத் திட்டம் (SANKALP) | 725 |
| **மொத்தம்** | **93,187** |

## 2.1 தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி வழங்குநர்கள் மூலம் பயிற்சி பெற்றவர்கள்

ஒவ்வொரு மாவட்டத்திலும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் உள்ள வேலை வாய்ப்புகளின் அடிப்படையில் இளைஞர்களுக்குப் பல்வேறு துறைகளின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டிற்கானக் குறுகிய காலத் திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மண்டல வாரியாக, பயிற்சி பெற்ற பயனாளர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.2**

**மண்டல வாரியாகப் பயிற்சி பெற்ற இளைஞர்களின் விவரங்கள்**

| வ. எண் | மண்டலத்தின் பெயர் | மாவட்டங்கள் | மொத்த பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சென்னை மண்டலம் | செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் | 3,484 |

| வ. எண் | மண்டலத்தின் பெயர் | மாவட்டங்கள் | மொத்த பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2 | மத்திய மண்டலம் | அரியலூர், திண்டுக்கல், கரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி | 6,992 |
| 3 | வடக்கு மண்டலம் | திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, வேலூர், விழுப்புரம், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, கடலூர் | 4,879 |
| 4 | மேற்கு மண்டலம் | சேலம், நீலகிரி, திருப்பூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, தர்மபுரி, கோயம்புத்தூர் | 5,108 |
| 5 | தெற்கு மண்டலம் | திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், தேனி, தென்காசி, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, கன்னியாகுமரி | 5,711 |
| **மொத்தம்** | | | **26,174** |

**அட்டவணை 2.3**

**துறைவாரியாகப் பயிற்சி பெற்ற இளைஞர்களின் விவரங்கள்**

| வ. எண் | துறை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தளவாடங்கள் | 30 |
| 2 | மேலாண்மை | 104 |
| 3 | ஆயத்த ஆடை | 6,050 |
| 4 | சுகாதாரம் | 4,594 |
| 5 | தானியங்கி | 967 |
| 6 | தோல் மற்றும் தோல் பொருட்கள் | 131 |
| 7 | மூலதனப் பொருட்கள் | 4,411 |
| 8 | வேளாண்மை | 210 |
| 9 | தகவல் தொழில் நுட்பம் | 2,278 |
| 10 | மின்னணுவியல் மற்றும் வன்பொருள் | 1,951 |
| 11 | மற்ற துறைகள் | 5,448 |
| **மொத்தம்** | | **26,174** |

## 2.2 தொழிற்சாலை திறன் பள்ளி

தொழிற்சாலை திறன் பள்ளி முன்முயற்சியானது தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தமிழ்நாட்டின் வேலையற்ற இளைஞர்களிடையே

வேலைவாய்ப்பின்மை மற்றும் திறன் இடைவெளிகளைச் சரிசெய்ய வடிவமைக்கப்பட்ட ஒரு மாற்றத்திற்கான திட்டமாகும். "ஆட்சேர்ப்பு, பயிற்சி மற்றும் பணியமர்த்து" மாதிரியைப் பயன்படுத்தி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் முன்னணி தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலை கூட்டமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் இணைந்து சிறப்புப் பயிற்சிகளை வழங்கவும், வேலை வாய்ப்புகளை உறுதி செய்வதன் மூலமும் பொருளாதார வளர்ச்சி மற்றும் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துகிறது. இதுவரை, 32 தொழிற்சாலைகள், பயிற்சி கூட்டாளர்களாக இணைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த முயற்சியின் கீழ் 4,624 நபர்கள் பல்வேறு திறன்களில் பயிற்சி பெற்றுள்ளனர். பயிற்சி பெற்ற நபர்கள் வெற்றிகரமாகத் தொழிற்சாலையில் பணியமர்த்தப் பட்டுள்ளனர். 1,413 நபர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.

## 2.3 அணிதிரட்டல் மற்றும் வேலை வாய்ப்புப் பங்குதாரர்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சுமார் 27 மனிதவள ஆலோசகர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு ஒருங்கிணைப்பாளர்களை அணிதிரட்டல் மற்றும் வேலை வாய்ப்பு கூட்டாளர்களாக இணைத்துள்ளது. தமிழ்நாட்டில் வேலையில்லாத திறமையான மற்றும் திறன் தேவைப்படும் நபர்களை அடையாளம் காண்பது பயிற்சி கூட்டாளர்களின் பொறுப்பாகும். இவர்கள் மேற்படி நபர்களைத் திரட்டி, அவர்களுக்குத் தேவையான தகுதி மற்றும் பணி தொடர்பான அடிப்படை ஆலோசனைகளை வழங்குவார்கள். மேலும், அவர்கள் ஆட்சேர்ப்பு நிறுவனங்கள் மூலம் தகுதியான பணியிடங்களில் பணியமர்த்தப்படுவர்.

கேப்ஜெமினி, ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ், இசட்எஃப் ரானே, ஃபாக்ஸ்கான், சால்காம்ப், பாரத்

எஃப்ஐஎச், பெகாட்ரான், ஓலா எலக்ட்ரிக், அப்பல்லோ டயர்ஸ், வீல்ஸ் இந்தியா, ஹ்வாஷின் இந்தியா ஆட்டோமோட்டிவ் போன்ற முன்னணி நிறுவனங்களில் இதுவரை 6,133 நபர்கள் தொழிற்சாலை திறன் பள்ளி மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**2.4 மதிப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கான அங்கீகாரம் (NCVET)**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இந்திய அரசின் கீழ் உள்ள தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில் (NCVET) மூலம் விருது மற்றும் மதிப்பீட்டு அமைப்பாக அதன் சமீபத்திய அங்கீகாரத்துடன் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது. இந்த அங்கீகாரம், நாடு தழுவிய திறன் மேம்பாட்டு முயற்சிகளில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் முக்கிய பங்களிப்பை உறுதிப்படுத்துகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் உள்ள பயிற்சித் திட்டங்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசுத் தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மூலம் தேர்வு செய்யப்பட்ட பயிற்சி கூட்டாளர்களின் பங்களிப்புடன் மாநிலம் முழுவதும் திறமையாகச் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் பயிற்சித் திட்டங்கள், தேசிய திறன் தகுதிக் கட்டமைப்பில் இணைந்துள்ள (NSQF) பல்வேறு வகையான படிப்புகளை உள்ளடக்கியது, அத்துடன் பல்வேறு துறைகளின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட தேவை அடிப்படையிலான படிப்புகளையும் கொண்டுள்ளன. இன்றுவரை, மொத்தம் 5,29,170 பயிற்சியாளர்கள் தேசிய திறன் தகுதிக் கட்டமைப்பின் கீழுள்ள துறை திறன் கவுன்சில் (SSCs) மூலம் பயிற்சி மற்றும் மதிப்பீட்டை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர்.

முதன்மை மதிப்பீட்டாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களின் பயிற்சி மற்றும் சான்றிதழுடன் மதிப்பீட்டு முகமைகளின் தெரிவு, நமது மாநிலத்தில் திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதற்கான முயற்சியில் ஒரு முக்கிய கட்டத்தைக் குறிக்கிறது. சொந்த சான்றிதழ் மதிப்பீட்டு செயல்முறைகள் மூலம், மதிப்பீடுகளின் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு அவை தமிழ்நாட்டின் தனித்துவமான தேவைகளை உறுதி செய்கிறது.

இது திறன் மேம்பாட்டில் தன்னம்பிக்கை மற்றும் தன்னிறைவுக்கான ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்.

## 2.5. தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் (TNASDC)

சுகாதாரம், கட்டுமானம், வங்கி, நிதிச்சேவைகள் மற்றும் காப்பீடு, ஆட்டோமொபைல் மற்றும் ஆட்டோமொபைல்

வாகன உதிரிபாகங்கள், தளவாடங்கள் (Logistics) போன்ற துறைகளில் உயர்தர திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாக ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் உதவியுடன் உயர்திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கத் தமிழ்நாடு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி (ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் பங்கு ரூ.50 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.50 கோடி) ஒதுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையங்களின் தற்போதைய பயிற்சி நிலவரம்**

- தொழில்துறை தொடர்பான மேம்பட்ட உயர்தர திறன் பயிற்சிகளை வழங்குதல்.

- தொழிற்சாலைகளுடன் இணைந்து பாடத்திட்டத்தை மேம்படுத்துதல்.
- வழிகாட்டுதல்களைப் பின்பற்றித் துறை சார்ந்த படிப்புகளை மேம்படுத்துதல்.
- பல தொழில்துறைகளிலும் போதிய பயிற்சி பெற்ற மனிதவளம் கிடைப்பதை உறுதி செய்வதற்காகப் பிற நிறுவனங்களின் பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளித்தல் (Training of Trainers-ToT).
- பயிற்சித் திறனை மேம்படுத்தத் தற்போதுள்ள உள்கட்டமைப்பு மற்றும் மனிதவளத்தைத் திறம்பட பயன்படுத்த அரசு / அரசுச் சார்பு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுதல்.
- தொழில் பழகுநர் பயிற்சி பெறுபவர்களுக்குத் தொழிற் சாலைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல் பணியுடன் பயிற்சி முன்னெடுப்புகளுக்கு உதவுதல்.
- வெளிநாட்டுக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து பயிற்சி பாடத்திட்டங்களை உருவாக்குதல்.

- தொழிற்சாலைகளின் தேவையான பயிற்சிகளை உள்ளூரை பயிற்சியாக வழங்குதல்.

**அட்டவணை - 2.4**

**தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையங்களின் பயிற்சி நிலை – 2023-24**

| தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் (TNASDC) | பயிற்சி பெற்ற மொத்த நபர்களின் எண்ணிக்கை |
|---|---|
| தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம்- சுகாதார நலன் | 6188 |
| தமிழ்நாடு – போக்குவரத்து மற்றும் தளவாடங்களுக்கான உயர்திறன் மேம்பாட்டு மையம். | 6378 |
| தமிழ்நாடு- வங்கி, நிதி சேவைகள் மற்றும் காப்பீட்டுக்கான உயர்திறன் மேம்பாட்டு மையம் (பி.எஃப்.எஸ்.ஐ). | 10,392 |
| தமிழ்நாடு- ஆட்டோ, ஆட்டோ உதிரிபாகங்கள் மற்றும் இயந்திர கருவிகளுக்கான உயர்திறன் மேம்பாட்டு மையம். | செயல்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளன |
| தமிழ்நாடு- கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்புக்கான உயர்திறன் மேம்பாட்டு மையம். | செயல்பாடுகள் தொடங்கப் பட்டுள்ளன |

## 2.6 முன் கற்றலின் அங்கீகாரம் (Recognition of Prior Learning – RPL)

முன் கற்றலின் அங்கீகாரம் (RPL) என்பது அனுபவத்தின் மூலம் பெற்றத் திறனை அங்கீகரித்தல் ஆகும். தமிழ்நாட்டில் தற்போது கட்டுமானத் துறையில் பணிபுரியும் முறைசாராத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருப்பதால், முன் கற்றலை அங்கீகரிப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. தளவாடங்கள், சிறுதொழில், தோல் மற்றும் நெசவுத் துறைகளில் பணிபுரியும் நபர்கள் இத்திட்டத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்படுவர். இதுவரை சான்றிதழ் பெற தகுதி உடைய 1,11,371 நபர்களுக்குத் திறன் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

மரபுசார் கலை மற்றும் கைவினைஞர்களுக்கான புதிய திட்டம் நடப்பாண்டில் திட்டமிடப்பட்டுள்ளது. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் ஒரு பகுதியாக ஊரகப்

பகுதிகளில் சமுதாயத் திறன் பள்ளிகளை (Community Skill Schools) நிர்வகிக்கும் தொழில் முனைவோருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆடைப் பயிற்சி, தானியங்கி மற்றும் கட்டுமானம் ஆகிய துறைகளில் இத்திட்டம் முடிக்கப்பட்டு 205 நபர்களுக்குத் திறன் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு

**அட்டவணை - 2.5**

**பயிற்சி முடிக்கப்பட்டவை**

| வ. எண் | பயிற்சி பிரிவுகளின் விவரம் | மாவட்டம் | பயிற்சியாளர்களுக்கு வழங்கிய சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஆடைப் பயிற்சி | கடலூர் | 55 |
| 2. | தானியங்கி | கள்ளக்குறிச்சி | 30 |
| 3. | கட்டுமானம் | கள்ளக்குறிச்சி | 60 |
| 4. | கட்டுமானம் | மதுரை | 60 |
| | **மொத்தம்** | | **205** |

மேலும் தற்சமயம் கட்டுமானம் மற்றும் தானியங்கி பயிற்சி பிரிவில் 150 நபர்களுக்குப் பயிற்சி நடந்து கொண்டிருக்கிறது.

கோயம்புத்தூர் முகாம்களில் உள்ள முகாம்வாழ் இலங்கை தமிழர்களுக்குப் பெயிண்டிங் மற்றும் தானியங்கி துறையில் 24 நபர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் மூலமாகத் தளவாடங்கள் பிரிவில் 1000 நபர்களுக்கு முன் கற்றல் அங்கீகாரத்தின் கீழ் மதிப்பீட்டை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

## 2.7. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் உள்ள சிறப்பு ஒன்றிணைந்த திட்டங்கள் (Special Convergence Programmes)

### 2.7.1. நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பாளர்களுக்கான பயிற்சி

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் கடந்த ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு

வாரியத்தின் கீழ் கண்ணகி நகரில் அழகுக்கலை, ஆடைகள், ஓட்டுநர் பயிற்சி போன்றவற்றில் 280 குடியிருப்பாளர்களுக்குப் பயிற்சி அளித்தது. தற்போது திறன் பயிற்சியை முதல் கட்டமாகக் கண்ணகி நகர், பெரும்பாக்கம், MS மற்றும் BS மூர்த்தி நகர் ஆகிய இடங்களில் வசிக்கும் 858 நபர்களுக்கு இலகுரக மோட்டார் வாகனப் பயிற்சி, கை எம்பிராய்டரி (அடவாலா), அழகுக்கலை நிபுணர் மற்றும் சுயதொழில் தையல்காரர் போன்ற படிப்புகள் மற்றும் வீட்டு பராமரிப்பு மற்றும் சமையல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

இரண்டாவது கட்டத்தில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது சென்னையில் AIR லேண்ட், வியாசர்பாடி, T.P.சத்திரம், தேனாம்பேட்டை, தெற்குப் போக் சாலை, K.K.நகர், கோட்டூர்புரம், அத்திப்பட்டு-அம்பத்தூர், ஆகிய இடங்களில் வசிப்பவர்களையும், திருநெல்வேலி

மாவட்டத்தில் உள்ள ரெட்டியார்பட்டி, V.O.C. நகரில் வசிப்பவர்களையும், திருச்சிராப்பள்ளியில் நரிமேடு பகுதியில் உள்ளவர்களுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. கை எம்பிராய்டரி, பிரைடல் ஃபேஷன் மற்றும் போர்ட் ஃபோலியோ மேக்கப் ஆர்ட்டிஸ்ட் மற்றும் நான்கு சக்கர வாகனம் ஓட்டும் பயிற்சியுடன் சுயதொழில் தையல்காரர் போன்ற பயிற்சி வகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.7.2. கலை மற்றும் கைவினைப் பொருட்களைப் புதுப்பிக்கும் பயிற்சி

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இப்பகுதியில் பாரம்பரிய கலை மற்றும் கைவினைப் பொருட்களைப் புதுப்பிக்கும் நோக்கத்தில் உள்ளது. இராமநாதபுரத்தில் பனை ஓலை தயாரித்தல் மற்றும் கடல் ஓடு தயாரித்தல், தஞ்சாவூரில் உள்ள தலையாட்டிப் பொம்மை மற்றும் தஞ்சாவூர் ஓவியம், கள்ளக்குறிச்சியில் மர

வேலைப்பாடு, தஞ்சாவூரில் பித் ஒர்க் (pith work) மற்றும் டை அண்ட் டை (Tie and Dye) உள்ளிட்ட பயிற்சி வகுப்புகளாகப் பல்வேறு மாவட்டங்களிலிருந்து குறிப்பிட்ட பாரம்பரிய கலை மற்றும் கைவினைப் பொருட்களைத் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் தேர்வு செய்துள்ளது. திட்டமிட்ட பாரம்பரிய கலை மற்றும் கைவினைப் படிப்புகளில் மதுரை மற்றும் திருநெல்வேலியில் களிமண் பானைகள், மதுரையில் காகிதக் கூழாலான பொருட்கள் (Papier Mache) மற்றும் திருநெல்வேலியில் பத்தமடை பாய் ஆகியவை அடங்கும். 270 பேர் பயிற்சி முடித்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக, கட்டம்-2-க்கான கைவினைத் திறன் பள்ளித் திட்டத்திற்கான (Crafts Skills School Programme) திறன் பயிற்சியை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.7.3. முகாம்வாழ் இலங்கை தமிழர்களுக்கான திறன் பயிற்சி

தமிழக அரசின் நிர்வாகத்தின் கீழ் முகாமில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கத் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் முயற்சி மேற்கொண்டுள்ளது. சுயதொழில் தையல்காரர்கள், இலகுரக மோட்டார் வாகன ஓட்டுநர்கள், அழகு சிகிச்சை நிபுணர்கள், பொதுப் பணி உதவியாளர்கள், தையல் இயந்திரம் இயக்குபவர், தரவு நுழைவு ஆபரேட்டர் போன்ற பல்வேறு பாடப்பிரிவுகளில் தேர்வர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் 3-ஆம் கட்ட பயிற்சிக்கான விண்ணப்பதாரர்களைத் திரட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. ப்ளாக்ஸ்மித், கார்பென்ட்ரி, எலக்ட்ரீசியன், கன்ஸ்ட்ரக்ஷன், மெக்கானிக் ஆட்டோமோட்டிவ், பெயிண்டிங், பிளம்பிங், டெய்லரிங் மற்றும் டூல் மேக்கர்ஸ் போன்ற படிப்புகளில் 780 பேருக்கு

முன் கற்றலுக்கான அங்கீகாரத்துடன் (RPL) திறன் பயிற்சியை நடத்த முன்மொழியப்பட்டுள்ளது.

### 2.7.4. மாற்றுத்திறனாளிகள் மற்றும் முன்னாள் படைவீரர்களுக்கான திறன் பயிற்சி

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மாற்றுத்திறனாளிகள் உட்பட விளிம்புநிலைப் பிரிவினரை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது, அழகு சிகிச்சை நிபுணர் மற்றும் டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் போன்ற திறன் பயிற்சி வகுப்புகளை சென்னையில் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் கிருஷ்ணகிரியில் கை எம்பிராய்டரி மற்றும் தையல் இயந்திரம் இயக்குபவர் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் நான்கு சக்கர வாகனம் ஓட்டும் பாடப்பிரிவுகளில் முன்னாள் படைவீரர்களுக்கான திறன் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி உள்ளது.

### 2.7.5. அரசு சமூக நல இல்லம் மற்றும் சிறப்பு இல்லங்களில் வசிக்கும் குழந்தைகளுக்கான திறன் பயிற்சி

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாட்டில் உள்ள அரசால் பராமரிக்கப்படும் இல்லங்களில் வசிக்கும் ஆதரவற்ற மாணவிகளைச் சமூக ரீதியாக உயர்த்தவும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் திறன் பயிற்சியை நடத்தியுள்ளது. தாம்பரம், சென்னை, கடலூர், சிவகங்கை, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில், கம்யூனிகேட்டிவ் ஆங்கிலம் மற்றும் முன் அலுவலக உதவி படிப்புகளுடன் கணினி பயிற்சியை மையமாக வைத்துப் பயிற்சி நடத்தப்பட்டுவருகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், 2024-2025 ஆம் ஆண்டில், செங்கல்பட்டு மற்றும் வேலூர் மாவட்டங்களில் அரசு பராமரிக்கும் சிறப்பு இல்லத்தில் தேர்வர்களுக்கு திறன் பயிற்சி

அளித்துள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக திட்டங்கள் மூலம் இவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குது மற்றும் அவர்கள் குற்றச்செயல்கள் செய்வதிலிருந்து விலக்குவது இதன் இலக்கு ஆகும். 08.04.2024 முதல் வேலூர் மற்றும் செங்கல்பட்டில் கேட்டரிங் பயிற்சி நடத்தப்படுகிறது. தையல் இயந்திர ஆபரேட்டர் பயிற்சி வேலூரில் 18.04.2024 முதல் நடத்தப்படுகிறது.

**2.7.6. நன்னீர் நண்பன் திட்டம்**

நன்னீர் நண்பன் திட்டத்தின் (NJMP) குறிக்கோள், கிராமங்களைச் சேர்ந்த உள்ளூர் நபர்களுக்குத் திறன் அடிப்படையிலான பயிற்சி அளிப்பது, குழாய் நீர் விநியோகத் திட்டத்தின் முன்னெச்சரிக்கை பராமரிப்பு உட்பட சிறு பழுதுகள் சரிபார்த்தல் மற்றும் பராமரிப்புகளை நடத்துவதற்கான திறன்களை அவர்களுக்கு வழங்குவதாகும். கிராம நீர் விநியோக

அமைப்புகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பில் தனிநபர்களுக்கு நீர் பயன்பாட்டு பணியாளர்களாகப் பயிற்சி அளிப்பதில் இந்தத் திட்டம் கவனம் செலுத்துகிறது. கூடுதலாக, பயிற்சி பெற்ற பயனாளிகளின் நிலையான வருமானத்தை உருவாக்க உறுதுணையாக உள்ளது. அரசு மற்றும் தனியார் ITI மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டத்தில் 3,671 நபர்கள் நன்னீர் நண்பன் திட்டத்தில் பயிற்சி பெற்றனர். இரண்டாம் கட்டப் பயிற்சி தற்போது நடைபெற்று வருகிறது.

### 2.7.7. வட சென்னை வளர்ச்சித் திட்டம்

வட சென்னை வளர்ச்சி திறன் திட்டம் என்பது தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் ஒரு முயற்சியாகும், இது திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்புகள் மூலம் வட சென்னையின் சமூக - பொருளாதார வளர்ச்சியை

மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் குறிப்பாக இப்பகுதியில் உள்ள வேலையற்ற இளைஞர்களைக் குறிவைத்து, அவர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கு, வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சியை வழங்குகிறது.

இதுவரை, வடசென்னையைச் சேர்ந்த 101 இளைஞர்கள், 2 & 4 வீலர் சர்வீஸ் டெக்னீஷியன்கள், சுய-லோடிங் மிக்சர் ஆபரேட்டர்கள், பேக்ஹோ ஆபரேட்டர்கள் மற்றும் ஆலை மேற்பார்வையாளர்கள் போன்ற பல்வேறு திறன் பயிற்சி திட்டங்களில் பயிற்சி பெற்றுள்ளனர். அவர்கள் சம்பந்தப்பட்ட தொழில்களில் வெற்றிகரமாக வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். அடுத்த கட்டமாக, மண்டலம் 4, 5, மற்றும் 6ல் உள்ள திறன் பயிற்சி வழங்கப்பட வேண்டிய இளைஞர்களைத் திரட்ட, பெருநகர சென்னை மாநகராட்சி ஆதரவை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் கோரியுள்ளது.

### 2.7.8. திருநங்கைகளுக்கான திறன் பயிற்சி

திருநங்கைகள் மற்றும் பெண்கள் 150 நபர்களுக்குப் பொது சேவை வாகனம் (PSV) பேட்ஜ்களுடன் கூடிய இலகுரக மோட்டார் வாகனங்களில் சுயசார்ப்பு திறன் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. 100 திருநங்கைகள் மற்றும் பெண்களுக்கு 3 சக்கர வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.7.9. பழங்குடியின இளைஞர்களுக்கான திறன் பயிற்சி

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் 100 பழங்குடியின இளைஞர்களுக்கான திறன் பயிற்சியை CNC ஆபரேட்டர்-VMC, CNC-ஆபரேட்டர்-டர்னிங், மெக்கட்ரானிக்ஸ் பராமரிப்பு, வாடிக்கையாளர் சேவை நிர்வாகி-குரல் அல்லாத சேவை, மற்றும் குரல் சேவை போன்ற பிரிவுகளில் நடத்தப்பட்டுள்ளது.

### 2.7.10. ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி விடுதி மாணவர்களுக்கான ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர், மற்றும், ஆதிதிராவிடர் நலத்துறைகளுடன் இணைந்து, 25,267 மாணவர்களுக்கு ஆங்கில பேச்சாற்றல் மற்றும் ஆளுமை மேம்பாட்டுப் பயிற்சியை அளித்து வருகிறது. தற்போது 80% பயிற்சி முடிந்துள்ளது. ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகளில், 8,697 தேர்வர்களில் 946 பேர் முன் மதிப்பீட்டை முடித்துள்ளனர், அதே சமயம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் 15,000 பேரில் 12,979 பேர் முன் மதிப்பீட்டை முடித்துள்ளனர். மீதமுள்ள மாணவர்களுக்குத் தற்போது முன்மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக திட்டத்தின் கீழ் உயர்கல்விக்கு வழிகாட்டும் பொருட்டு, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு இல்லங்களில் தங்கி 12-ஆம் வகுப்பு பயின்ற 141 மாணவ, மாணவியர்களுக்கான "கல்லூரிக் கனவு சிறப்பு பதிப்பு 2024 நிகழ்ச்சி" மூலம் தொழில் வழிகாட்டுதல், கல்வி வாய்ப்புகள் மற்றும் உணர்திறன் திட்டப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

### 2.8. இளைய தளம்

இளையதளம் என்பது வேலை தேடுபவர்களை தனியார் வேலை வழங்குநர்கள் மற்றும் திறன் பயிற்சி மையங்களுடன் இணைக்கும் ஒரு உதவி மையமாகும், இது வழிகாட்டுதல், ஆலோசனை, உதவி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றை வழங்குகிறது.

சாட்பாட்-இளையா (Chatbot-Ilaya) என்ற திட்டம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் 01.12.2023 அன்று தொடங்கப்பட்டது. வேலைகள் / பயிற்சிக்குப் பதிவு செய்வதற்கான இடைமுகமாக இந்த சாட்பாட் செயல்படுகிறது.

வேலை வாய்ப்பு கூட்டாளர்களுக்கு வேலைகளை இடுகையிடவும், விண்ணப் பதாரர்களைக் கண்காணிக்கவும் மற்றும் நிர்வகிக்கவும் ஒரு வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள், உறவு மேலாண்மை அமைப்பில் (CRM), தரவை உள்ளீடு செய்து, விண்ணப்பத்தின் நிலையைக் கண்காணிக்க ஏதுவாகப் பின்தள அமைப்பு ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் நிலை இளையதள ஆதரவு மையத்தால் கண்காணிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தில் விண்ணப்பதாரருக்கு உதவ தொலைபேசி அழைப்புகள் செய்யப்படுகின்றன.

வேலை வழங்குநர்களால் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் திறன் பயிற்சிக்கு விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். விண்ணப்பதாரர்கள் கிடைக்கக்கூடிய எந்த வாய்ப்பிலும் ஆர்வம் காட்டவில்லை எனில், அவர்கள் தங்களது விருப்பத்தைத் தெரிவித்தால் அவை மதிப்பாய்வு செய்யப்பட்டு உரிய மேல் நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

**2.8.1. வேலை மற்றும் பயிற்சி வழங்குநர்கள்**:

இதுவரை 26 அணிதிரட்டல் மற்றும் வேலை வாய்ப்புப் பங்குதாரர்கள், 25 தொழிற்சாலை திறன் பள்ளிகள், 277 பயிற்சி மையங்கள், சிறப்பு மையங்கள், தொழிற்கூட்டமைப்புகள் மற்றும் கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு மூலம் பயிற்சி வழங்கும் அமைப்புகள் இணைய தளத்தில் இணைந்துள்ளனர்.

**2.8.2. வேலை தேடுபவர்கள்**

அரசுத் துறைகளின் தரவுகளிலிருந்து எடுக்கப்பட்ட 18 முதல் 35 வயதுக்குட்பட்ட

வேலையில்லாத இளைஞர்கள் (1,83,000), வேலையில்லா இளைஞர்களுக்கான அரசு உதவித் தொகை பெறுவோர் (22,247), திறன் பதிவு போர்ட்டலில் பதிவுச் செய்யப்பட்டவர்கள் (1,24,811), கல்லூரி படிப்பைப் பாதியில் நிறுத்தியவர்கள் (16,401), பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்தியவர்கள் (11,604), வேலை வாய்ப்பு முகாம்களில் பங்குகொண்டவர்கள் (1,406) ஆகியோரை Chatbot மூலம் தொடர்பு கொண்டு அவர்களுக்கான வேலைகள் மற்றும் பயிற்சிக்கான பதிவுகள் கோரப்பட்டுவருகின்றன.

**2.9. அரசுப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு HCL நிறுவனத்தின் மூலம் சிறப்புத் திறன் பயிற்சி அளித்தல்**

HCL நிறுவனம், அரசுப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு "HCL Techbee" என்ற திட்டத்தை வகுத்துள்ளது. இதன் மூலம் மாணவர்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதன் தொடர்பான பணிகளில் சேர முடியும்.

இந்தப் பயிற்சித் திட்டம் கணிதம் அல்லது வணிகக் கணிதத்துடன் பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று 60% மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற இளைஞர்களை இலக்காகக் கொண்டது.

மாநில அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு TNDSC-HCL டெக்பீயின் வேலை தயார் பயிற்சி திட்டத்தில் சேருவதற்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் நிதி உதவி வழங்குகிறது. இதுவரை 141 பேர் HCL நிறுவனத்தில் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

**2.9.1. அரசுக் கல்லூரிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள், பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு TCS நிறுவனத்தின் மூலம் சிறப்புத் திறன் பயிற்சி அளித்தல்**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் மற்றும்

கல்லூரிக் கல்வி இயக்குநரகம் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள அரசு பொறியியல் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தகுதியானவர்களை TCS iON மூலம் பயிற்சி பெற தேர்வு செய்துள்ளது. தரவுப் பகுப்பாய்வு, உண்மையான உலக பயன்பாட்டிற்கான இயந்திர கற்றல், அப்ளைடு கிளவுட் கம்ப்யூட்டிங், ஆக்மென்டட் ரியாலிட்டி டெவலப்மெண்ட் மற்றும் அதன் பயன்பாடுகள், விளையாட்டு வடிவமைப்பு மற்றும் அதன் பயன்பாடுகள், சைபர் பாதுகாப்பு, உண்மை உலக பயன்பாட்டிற்கான செயற்கை நுண்ணறிவு, IoT மற்றும் அதன் பயன்பாடுகள் டேட்டா மைனிங் மற்றும் அனலிட்டிக்ஸ், சோஷியல் மீடியா மற்றும் டெக்ஸ்ட் அனலிட்டிக்ஸ் ஆகியவற்றுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டது. இதுவரை, இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 1,898 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

**2.9.2. ஸ்னீடர் உலகத் திறன் அகாடமி**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்துடன் இணைந்து, உலக திறன் அகாடமி மற்றும் ஸ்மார்ட் உற்பத்தி மையங்களை Schneider Electric India Pvt. லிமிடெட் மூலம் சென்னை சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரி, கோயம்புத்தூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரி, அரசு பாலிடெக்னிக் கல்லூரி தர்மபுரி, ஸ்ரீனிவாச சுப்புராய பாலிடெக்னிக் கல்லூரி, புத்தூர் மயிலாடுதுறை, அரசு பாலிடெக்னிக் கல்லூரி, திருச்சி மற்றும் அரசு பாலிடெக்னிக் கல்லூரி, தூத்துக்குடி ஆகிய 6 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் ரூ.9.93 கோடி செலவில் நிறுவியுள்ளது.

**2.9.3. ஸ்கில்ஸ் ஆன் வீல்ஸ் (Skills on Wheels)**

ஊரக மற்றும் அணுக முடியாத இடங்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளின் திறன் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக

இளைஞர்களுக்கான "ஸ்கில்ஸ் ஆன் வீல்ஸ்" மொபைல் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் தனித்துவமான திட்ட முன்முயற்சியானது திறன் கவுன்சில் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றி "மொபைல் யூனிட்களை" வடிவமைத்துள்ளது, "ஸ்கில்ஸ் ஆன் வீல்ஸ்" மாநிலம் முழுவதும் பயணித்து, பயனாளிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திப் பயிற்சி அளிக்கும். அணுக முடியாத மலைப்பாங்கான பகுதிகள், தொலைதூர பகுதிகள் மற்றும் பின்தங்கிய இளைஞர்களின் மீது சிறப்பு கவனம் செலுத்துகிறது. தற்போது கல்வராயன் மலை மற்றும் தர்மபுரியில் உள்ள பல்வேறு பகுதிகளில் இத்திட்டத்தின் கீழ் 141 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

## 2.10 வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் பெறுதல் மற்றும் அறிவு விழிப்புணர்வுத் திட்டம் (SANKALP)

வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் பெறுதல் மற்றும் அறிவு விழிப்புணர்வுத் திட்டம் (Skill Acquisition Knowledge Awarness Livelihood Program - SANKALP) திறன் மேம்பாட்டிற்கான நிறுவன வழிமுறைகளை வலுப்படுத்தவும், நாடு முழுவதும் உள்ள இளைஞர்களுக்குத் தரமான மற்றும் சந்தை சார்ந்த பயிற்சி கிடைக்கச் செய்யவும் தொடங்கப்பட்டது.

தேசிய மற்றும் மாநில அளவில் நிறுவன அமைப்புகளை வலுப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தை உலக வங்கி நிதியுதவி மற்றும் மத்திய, மாநில அரசுகளின் 60:40 என்ற விகிதத்திலான நிதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த முதல் ஆண்டில் ரூ.20.30 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்தத்

திட்டத்தை ஒன்றிய அரசு மார்ச் 2024 ல் நீட்டித்துள்ளது.

**2.10.1. நிறுவனத்தை வலுப்படுத்துதல்**

**மாநில அளவில்**

பல்வேறு திறன் மேம்பாட்டு திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில், திட்ட மேலாண்மை பிரிவு உருவாக்கப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. திட்ட மேலாண்மை பிரிவை ஓராண்டுக்கு வலுப்படுத்த ரூ.137.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை எண் 14, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, நாள் 10.10.202022 அன்று வெளியிடப்பட்டுள்ளது. தேவையைக் கருத்தில் கொண்டு, திட்டத் தலைவர், திட்ட நிர்வாகி, திட்ட உதவியாளர், திட்ட MIS பணியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர் / டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் எனப் பல்வேறு பதவிப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. திட்டச் செயல்பாடுகளை

விரைவுபடுத்தவும், கண்காணிப்பதை உறுதி செய்யவும் மாநில அளவிலான திட்ட மேலாண்மைப் பிரிவை வலுப்படுத்த SANKALP திட்டத்தின் கீழ் இந்தப் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு

- வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் பெறுதல் மற்றும் அறிவு விழிப்புணர்வுத் திட்டம் (SANKALP)
- மற்ற துறைகளில் உள்ள திறன் திட்டங்கள் ஒருங்கிணைத்தல் (Convergence)
- உலக திறன்கள் & தொழில் இணைப்பு
- தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் / TNIPP Phase-II
- ஒருங்கிணைந்த வலைதளம்

**மாவட்ட அளவில்**

மாவட்டத் திறன் குழுக்களின் செயல்பாட்டை உறுதி செய்தல் மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பது உட்பட, மாவட்டங்கள் முழுவதும் தமிழ்நாடு திறன்

மேம்பாட்டுக் கழகத்தின் முயற்சிகளைத் தடையின்றி செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக, மாவட்ட திறன் மேம்பாட்டு அலுவலகங்களை வலுப்படுத்துவதற்கு பணியாளர்கள் தேவை. இந்தப் பணியாளர்கள், ஆலோசனை, தொழில் வழிகாட்டுதல், திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு விண்ணப்பதாரர்களைச் சேர்ப்பது, பயிற்சி கூட்டாளர்களை கண்காணிப்பது, மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து வழக்கு மற்றும் IEC நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஏற்கனவே 12 மாவட்டங்களில் 12 MIS பணியாளர்களை நியமித்துள்ளது.

### 2.10.2 விளிம்பு நிலை சமுதாயங்களுக்கான சிறப்பு முன்னெடுப்புகள்:

இந்தப் பயிற்சித் திட்டம், நலிவடைந்த கலைகளை மேற்கொண்டு வரும் கலைஞர்கள்,

கைவினைப் பொருள் கலைஞர்கள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த விளிம்புநிலை சமூகங்களின் கீழ் வரும் பயனாளிகளின் முன்னேற்றத்தில் மட்டுமே கவனம் செலுத்துகிறது. பயிற்சித் திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பயிற்சித் திட்டத்தின் பெயர் | பயனாளிகள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சிவகங்கையில் பனை ஓலை கைவினை திறன் பயிற்சி | பெண்கள் | 50 |
| 2 | தென்காசியில் கரும்பு சக்கையில் கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி | பெண்கள் மற்றும் விதவைகள் | 25 |
| 3 | திருநெல்வேலியில் தலைமுடி விக் தயாரித்தல் | பீடி சுற்றும் பெண் தொழிலாளர்கள் | 50 |
| 4 | மதுரையில் சுங்குடி சேலை முடிச்சுப் பயிற்சி | கைவினை கலைஞர்கள் | 30 |
| 5 | கள்ளக்குறிச்சியில் மர வேலைப்பாடு பயிற்சி | கைவினை கலைஞர்கள் | 30 |
| 6 | தூத்துக்குடியில் தேனீ வளர்ப்பு, பனைமரம் மற்றும் மண்புழு உரம் பயிற்சி | விளிம்பு நிலை மக்கள் | 75 |

| வ. எண் | பயிற்சித் திட்டத்தின் பெயர் | பயனாளிகள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7 | தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கடலில் மீன்பிடி படகு இயந்திரத்தின் பராமரிப்பு மற்றும் மீனவர்களின் பாதுகாப்புப் பயிற்சி | மீனவர்கள் | 20 |
| 8 | தூத்துக்குடியில் வலைப்பின்னுதல் பயிற்சி | மீனவர்கள் | 30 |
| 9 | இராமநாதபுரத்தில் ஆழ்கடல் மீன்பிடி நுட்பங்கள் (இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடி கப்பல்கள்) | மீனவர்கள் | 60 |
| 10 | வேலூரில் தேன் உற்பத்தி வாழ்வாதார திறன் பயிற்சி | பழங்குடியின மக்கள் | 100 |
| 11 | நாகப்பட்டினத்தில் மீன் மற்றும் மீன் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் | மீனவர்கள் | 25 |
| 12 | மதிப்பு கூட்டப்பட்ட வாழை நார் பொருட்கள் தயாரித்தல், தேனி | விளிம்புநிலை மக்கள் | 100 |
| 13 | கன்னியாகுமரியில் கோயில் நகைகள் செய்யும் கலைக்குப் புத்துயிர் அளித்தல் | பெண்கள் | 20 |

| வ. எண் | பயிற்சித் திட்டத்தின் பெயர் | பயனாளிகள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 14 | கன்னியாகுமரியில் தென்னை ஓலை மூலம் உறிஞ்சுக்கோல் தயாரித்தல் பயிற்சி | பெண்கள் | 30 |
| 15 | கன்னியாகுமரியில் மயிலாடி பாரம்பரிய சிற்பம் வடித்தல் கலை பயிற்சி | மயிலாடி கலைஞர்கள் | 20 |
| 16 | வாழை நாரில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி, தூத்துக்குடி | பெண்கள் | 60 |
| மொத்தம் | | | 725 |

### 2.10.3. தரம் மற்றும் சந்தை தொடர்பு பயிற்சியாளர்களுக்கானப் பயிற்சி:

பயிற்சியாளர் பற்றாக்குறையைப் போக்கவும், பயிற்றுவிப்புத் திறனை மேம்படுத்தவும் 1,200 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது பயிற்சியாளர்களின் திறன் இடைவெளியை நிரப்பிட, தரமானப் பயிற்சியாளர்களை உருவாக்கும். 1199 பயிற்சியாளர்களுக்கு ஆயத்த ஆடைகள்,

சுகாதாரம், தானியங்கி, தோல், மின்னணுவியல், நீர் மேலாண்மை மற்றும் குழாய் அமைப்புப் பணி, மூலதனப் பொருட்கள் மற்றும் வேளாண்துறை ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

### 2.10.4 SANKALP திட்டத்தின் கீழ் மீனவ சமூகத்தைச் சார்ந்தவர்களுக்குத் திறன் பயிற்சி

பல மீனவ இளைஞர்கள் உயர்கல்வி மற்றும் பல்வேறு தொழில்நுட்ப படிப்புகளை மேற்கொண்டு வருகின்றனர், இருப்பினும் ஒரு சிலர் மட்டுமே பொருத்தமான வேலை வாய்ப்பினைப் பெற முடிகிறது. இன்னும் பல படித்த இளைஞர்கள் திறன் குறைபாடு மற்றும் தொழில்துறை தேவைகளுடன் பொருந்தாத காரணத்தால் மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர். எனவே, மீனவ இளைஞர்களுக்கு மீன்பிடித் துறையிலும், மீன்பிடி அல்லாத துறைகளிலும் பயிற்சி அளிப்பதற்காக மீனவர்களின் திறன்களை மேம்படுத்துவது இன்றியமையாததாகிறது. மீன்வளம் மற்றும்

மீனவர் நலத் துறையுடன் இணைந்து **SANKALP** திட்டத்தின் கீழ் ஃபுல் ஸ்டாக் டெவளப்மன்ட் (Full Stack Development), டிஜிட்டல் மார்க்கெட்டிங், பிஸ்னஸ் அனாலிடிக்ஸ் (Digital Marketing & Business Analytics) மற்றும் படகு என்ஜின் பழுதுபார்ப்பு பயிற்சி (Marine Engine Repair and Maintenance) ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

**3. நான் முதல்வன்**

"நான் முதல்வன்" (நான் சிறந்தவன்) என்பது உயர்கல்வியை மாற்றியமைக்கும் மாபெரும் திறன் முன்முயற்சியாக ஆண்டுதோறும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களைத் திறன் சார்ந்த பயிற்சிகள் மூலம் தொழில்துறைக்கு தயாரான திறன் மிகு சமுதாயத்தை உருவாக்கும் இலட்சிய நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

**நோக்கங்கள்:**

"நான் முதல்வன்" இளைஞரின் முழுமையான வளர்ச்சி மற்றும் திறன்

மேம்பாட்டை உள்ளடக்கிய திட்டம். படித்து முடித்தவர்கள் வேலைக்கான தயார்நிலையை அடைய தொழிற் நிறுவனங்களுக்கு ஏற்றத் திறனைக் கல்லூரியில் பயிலும்போதே ஒருங்கிணைப்பது இத்திட்டத்தின் நோக்கம்.

தொழில்துறை சார்ந்த முக்கிய திறன்களை, குறிப்பாக அதிநவீன தொழில்நுட்பங்களில் பயிற்சி வழங்குதல், ஆளுமை மேம்பாடு மற்றும் மொழிப்புலமை (ஆங்கிலம்) போன்ற அத்தியாவசிய மென் திறன்களை வழங்குவதன் மூலம் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற தொலைநோக்கு திட்டத்தினை அடைய உதவும். பொறியியல், கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) உள்ள மாணவர்களுக்குப் எந்தவித நிதிச் சுமையும் இல்லாமல் அணுகக்கூடியது. இந்த முயற்சியானது மாணவர்கள், கல்வியாளர்கள், தொழில்

வல்லுநர்கள், வழிகாட்டிகள் மற்றும் நிர்வாகிகள் உட்பட அனைவரின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1-ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட "நான் முதல்வன்" திட்டம், தமிழ்நாட்டில் உயர்கல்வியை மாற்றியமைக்கக்கூடிய ஒரு மாபெரும் முயற்சியாகும்.

2022-2023ல், எதிர்பார்ப்புகளையும் கடந்து, 13.14 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பல்வேறு திறன்களில் பயிற்சி அளித்து, 10 லட்சம் மாணவர்களுக்கான திறன் பயிற்சி என்ற இலக்கைத் தாண்டியது. இது அனைவரையும் உள்ளடக்கிய ஒரு முன்னெடுப்பாகும்.

2023-2024ல், பாலிடெக்னிக் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் (ITI)

விரிவுபடுத்தப்பட்டு, 2,085 கல்வி நிறுவனங்களில் 14.68 லட்சம் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

மாணவர்கள் திறன் பயிற்சியை எந்த கட்டணமும் இன்றி எளிதாக அணுகுவதற்கு பிரத்யேக இணையதளம் (www.naanmudhalvan.tn.gov.in) இத்திட்டத்திற்காக இயங்கி வருகிறது.

### 3.1. நான் முதல்வன் வெற்றி

இளைஞர்களின் ஆர்வங்கள் அவர்களைத் தொடர்புடைய தொழில் பாதைகளுக்குத் திசைதிருப்பும் வகையில் மாற்றப்படுகின்றன. மாணவர்கள் போட்டித் தேர்வுகளுக்கான தயாரிப்பு, தொழில்முனைவு, உயர்கல்வி அல்லது வேலைவாய்ப்புகளைத் தங்கள் விருப்பமாகத் தேர்ந்தெடுத்து, அதற்கேற்ப தயாராகி, அவர்கள் தங்கள் இலக்கை அடைய முடியும்.

நான் முதல்வனின் சாராம்சம் கல்விக்கும் வேலைவாய்ப்பிற்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதில் உள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில் 76.4 சதவிகித பொறியியல் மாணவர்களும் 83.8 சதவிகிதம் கலை மற்றும் அறிவியல் மாணவர்களும் வளாக வேலைவாய்ப்பு முகாம் மூலமாக வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளதால் இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. 1,84,283 விண்ணப்பதாரர்களில் 1,48,149 மாணவர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

**3.2 பொறியியல் கல்லூரிகளுக்கான "நான் முதல்வன்" திட்டம்**

2023 - 2024 ஆம் கல்வியாண்டில் 21 தொழில்துறைப் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து 29 பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அடுத்த பருவத்திற்கு 30 பாடப்பிரிவுகள் 17 தொழில்துறைப்

பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. மாணவர்களுக்கு முறையான திறன்களை உறுதி செய்யத் தொழில்துறையில் திகழும் நடப்புகள் தொழில்துறை பயன்பாட்டு நடைமுறைகள் மற்றும் மாதிரிகள் பயன்படுத்தப்படுகின்றன.

### 3.2.1 பயிற்றுநர்களுக்கானப் பயிற்றுவிப்பு மேம்பாட்டுத்திட்டம்

- 2023-2024 ஆம் கல்வியாண்டில் ஒற்றை எண் (Odd Semester) பருவத்திற்கானப் பேராசிரியர் பயிற்சி முகாம் (Faculty Development Program - FDP) 6,171 பொறியியல் பேராசிரியர்களுக்கு ஜூலை 2023 இல் நடத்தப்பட்டது.
- பிப்ரவரி 2024ல் 3,671 பொறியியல் ஆசிரியர்களுக்கு 2023-2024 கல்வியாண்டின் இரட்டை எண் (Even Semester) பருவத்திற்கான பேராசிரியர் பயிற்சி முகாம் (Faculty Development Program) நடத்தப்பட்டது

### 3.2.2 பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கானப் பயிற்சித் திட்டத்தினைச் செயல்படுத்துதல் (முக்கியப் புள்ளி விவரங்கள்)

- பதிவு செய்யப்பட்ட பொறியியல் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 348 ஆகும்.
- பதிவு செய்யப்பட்ட பொறியியல் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 3,23,000 ஆகும்.
- அங்கீகரிக்கப்பட்ட தொழில்துறை பயிற்சி வழங்குநர்களின் மொத்த எண்ணிக்கை 26 ஆகும்.
- கட்டாய திறன் படிப்புகளின் மொத்த எண்ணிக்கை 59 ஆகும்.

**அட்டவணை 3.1**

**2023-2024 ஆம் கல்வியாண்டில் ஒற்றை எண் பருவத்திற்க்கானத் (Odd Semester) திறன் அடிப்படை கொண்ட பயிற்சிகளின் விவரம்**

| வ. எண் | பாடப்பிரிவு | பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Surface Modelling | 2662 |

| வ. எண் | பாடப்பிரிவு | பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2 | Electric Vehicle Technology and Manufacturing | 1482 |
| 3 | Industry 4.0 and its Applications in Mechanical Engineering | 3886 |
| 4 | 3D Printing using NX | 3276 |
| 5 | PLC using Simatics | 2467 |
| 6 | Manufacturing of mechanical components using CNC Turning and Milling | 1616 |
| 7 | Drone design and testing | 3645 |
| 8 | Networking Essentials | 3674 |
| 9 | Industry 4.0 (Digital Twin) | 1947 |
| 10 | Artificial Intelligence & applications (AI) | 1824 |
| 11 | Machine Learning (ML) | 5003 |
| 12 | Cybersecurity and applications | 2823 |
| 13 | Concrete Building System Design | 3443 |
| 14 | Design of ON / OFF Grid Solar PV System | 1311 |

| வ. எண் | பாடப்பிரிவு | பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 15 | Integrated Building Services | 1951 |
| 16 | Full stack with Python programming | 4257 |
| 17 | ChatGPT | 4319 |
| 18 | Devops | 1802 |
| 19 | Full Stack Development with Java. | 2868 |
| 20 | Salesforce Developer | 1945 |
| 21 | Digital Marketing | 5810 |
| 22 | Data Analytics | 1145 |
| 23 | BlockChain | 2865 |
| 24 | Architecture Visualization using AR/VR | 1491 |
| 25 | RedHat Linux | 782 |
| 26 | Employability Skills | 33,528 |
| 27 | Experience Based Project Learning | 47,004 |
| 28 | Digital Skills | 96,078 |
| 29 | Language Skills | 78,096 |
| **Total** | | **3,23,000** |

## அட்டவணை 3.2

**2023-2024 ஆம் கல்வியாண்டில் இரட்டை எண் பருவத்திற்கானத் (Even Semester) திறன் அடிப்படை கொண்ட பயிற்சிகளின் விபரம்**

| வ. எண் | பாடப்பிரிவு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Artificial Intelligence & Machine Learning Fundamentals | 5414 |
| 2 | IoT Concepts and Applications | 2059 |
| 3 | Data Science Fundamentals | 4515 |
| 4 | Drone Basics, Design, Assembly, Test | 1993 |
| 5 | Electric Vehicle Technology and Manufacturing | 2082 |
| 6 | Design of Photo Voltaic System | 2000 |
| 7 | Product Design and Manufacturing - 3D Surface Modelling | 1997 |
| 8 | EV Design | 995 |
| 9 | Product Design Engineering and Modelling | 1965 |
| 10 | Manufacturing of Mechanical components using CNC turning & milling | 2080 |
| 11 | Solid Waste Management | 2055 |

| வ. எண் | பாடப்பிரிவு | எண்ணிக்கை |
|---|---|---|
| 12 | Energy Efficient Buildings (Green Cement, Sustainability) | 1932 |
| 13 | Analog IC Design | 1979 |
| 14 | Image Processing | 2190 |
| 15 | Industrial IoT and Industry 4.0 | 5432 |
| 16 | 4G/5G Communication Networks | 3492 |
| 17 | Software testing and Automation | 1867 |
| 18 | Neural Networks and Deep Learning | 1245 |
| 19 | Cloud Computing | 3923 |
| 20 | Cloud Services Management | 2376 |
| 21 | Data Warehousing | 774 |
| 22 | Web Technologies (Full Stack with DJANG O) | 3370 |
| 23 | UI & UX Design | 1898 |
| 24 | CyberSecurity | 5282 |
| 25 | Devops | 1595 |
| 26 | Generative AI for Engineering | 3826 |
| 27 | Prompt Engineering | 847 |
| 28 | Employability Skills | 28,057 |
| 29 | Experience Based Project Learning | 52,603 |
| 30 | Language Skills | 78,096 |
| **Total** | | **2,27,939** |

## அட்டவணை 3.3

**மண்டல வாரியான "நான் முதல்வன்" பயிற்சித் திட்டத்தில் பதிவு செய்த பொறியியல் கல்லூரி மாணவர்களின் விவரம்**

| வ. எண் | மண்டலத்தின் பெயர் | மாவட்டங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சென்னை மண்டலம் | செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் | 70,991 |
| 2 | மத்திய மண்டலம் | அரியலூர், திண்டுக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், நாகப்பட்டினம் | 59,680 |
| 3 | வடக்கு மண்டலம் | திருவண்ணாமலை, ராணிப்பேட்டை வேலூர், விழுப்புரம், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, கடலூர் | 32,757 |
| 4 | மேற்கு மண்டலம் | சேலம், நீலகிரி, திருப்பூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, தர்மபுரி, கோயம்புத்தூர் | 96,422 |
| 5 | தெற்கு மண்டலம் | திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், தேனி, தென்காசி, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை கன்னியாகுமரி | 63,150 |
| **மொத்தம்** | | | **3,23,000** |

## 3.3 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான "நான் முதல்வன்" திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள 10 பல்கலைக் கழகங்களின் கீழ் இயங்கிவரும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இரட்டை பருவமுறை (Even Semester) மாணவர்களுக்கு 2023-2024 ஆம் கல்வி ஆண்டிற்கான நான் முதல்வன் திறன் மேம்படுத்தும் முன்னெடுப்புகள் ஜூலை 2023 ல் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள 10 பல்கலைக்கழகங்களில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான 2024-2025 ஆம் கல்வியாண்டிற்கான நான் முதல்வன் திறன் மேம்படுத்தும் திட்டம் தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

நான் முதல்வன் (NM) திட்டத்தின் பாடநெறிகள், மொழித் திறன், கணினி திறன்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த திறன்களை

உள்ளடக்கிய திறன் பயிற்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழகம் முழுவதும் உள்ள 10 பல்கலைக்கழகங்களுடன் இணைந்த கல்லூரிகளின் வழக்கமான பாடத்திட்டத்தில் 2 மதிப்பீடுகள் கொண்ட கட்டாய பாடமாக வழங்கப்படுகின்றன.

### 3.3.1 பயிற்றுநர்களுக்கான பயிற்றுவிப்பு மேம்பாட்டுத் திட்டம்:

- 2023-2024 ஆம் கல்வியாண்டில் ஒற்றை எண் பருவத்திற்கானப் (Odd Semester) பேராசிரியர் பயிற்சி முகாம் (Faculty Development Program - FDP) 14,463 கலை மற்றும் அறிவியல் பேராசிரியர்களுக்கு ஜூன் 2023 இல் நடத்தப்பட்டது.
- பிப்ரவரி 2024ல் 11,931 கலை மற்றும் அறிவியல் ஆசிரியர்களுக்கு 2023-2024 கல்வியாண்டின் இரட்டை எண் பருவத்திற்கான (Even Semester) ஆசிரியர் பயிற்சி முகாம் (Faculty Development Program) நடத்தப்பட்டது

### 3.3.2 “நான் முதல்வன்” திட்டத்தில் பயன்பெறும் கல்லூரிகள் மற்றும் மாணவர்கள் விவரம்

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இரட்டை எண் பருவமுறைக்கான (Even Semester) ‘நான் முதல்வன் திட்டம்’ அரசு தன்னாட்சி கல்லூரிகள், தன்னாட்சி அல்லாத அரசுக் கல்லூரிகள், தன்னாட்சி அல்லாத அரசு உதவி பெறும் கல்லூரிகள், மற்றும் தன்னாட்சி அல்லாத தனியார் கல்லூரிகள் ஆகிய நான்கு வகையானக் கல்லூரிகளில் பயிற்சி வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ள நான்கு வகையான கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி வகைகள் | பயனடைந்த கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசுக் கல்லூரிகள் | 153 |
| 2 | அரசு தன்னாட்சி கல்லூரிகள் | 19 |
| 3 | தன்னாட்சி அல்லாத அரசு உதவி பெறும் கல்லூரிகள் | 67 |
| 4 | தன்னாட்சி அல்லாத தனியார் கல்லூரிகள் | 588 |
| **மொத்தம்** | | **827** |

| வ. எண் | வருடம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | முதலாமாண்டு | 2,72,188 |
| 2 | இரண்டாம் ஆண்டு | 2,97,105 |
| 3 | மூன்றாம் ஆண்டு | 2,83,545 |
| **மொத்தம்** | | **8,52,838** |

**அட்டவணை 3.4**

**2023-2024 கல்வியாண்டில் ஒற்றை எண் பருவத்திற்கான** (Odd Semester) **திறன் அடிப்படை கொண்ட பயிற்சிகளின் விவரம்**

| வ. எண் | பாடப்பிரிவு | பயிற்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Microsoft Office Essentials | 250617 |
| 2 | Fundamentals of coding and cloud | 62407 |
| 3 | Foundation on Cloud & Coding | 22072 |
| 4 | Foundation of AI/ML | 24794 |
| 5 | Banking, Lending and NBFC Products and Services- 1 | 22955 |
| 6 | Zohobooks | 11922 |

| வ. எண் | பாடப்பிரிவு | பயிற்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 7 | Freight Forwarding | 47842 |
| 8 | FinPro | 10964 |
| 9 | E-Commerce Laws, Regulation and E- Payment Systems | 7641 |
| 10 | GST & Income Tax | 10964 |
| 11 | Banking Financial Services | 11764 |
| 12 | Fundamentals of Data Analytics with Tableau | 14458 |
| 13 | International Regulatory Requirement in Clinical Trial and Data Management | 10969 |
| 14 | International Regulatory Requirement in Good Manufacturing Practices | 13645 |
| 15 | PCR Technology | 6323 |
| 16 | Fundamentals of Data Analytics with Tableau | 8121 |
| 17 | Digital Marketing | 19089 |
| 18 | Story Telling | 2977 |
| 19 | Content writing and Marketing | 11317 |
| 20 | Graphic Design (Canva) | 6634 |
| 21 | Graphic Design | 6861 |
| 22 | Adobe Visual Design | 11778 |
| **TOTAL** | | **5,96,114** |

## அட்டவணை 3.5

**2023-2024 கல்வியாண்டில் இரட்டை எண் பருவத்திற்கான (Even Semester) திறன் அடிப்படை கொண்ட பயிற்சிகளின் விபரம்**

| வ. எண் | பாடப்பிரிவு | பயிற்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | English Language Communication | 272188 |
| 2 | Employability Skills | 234698 |
| 3 | Oracle Cloud Architecture | 62407 |
| 4 | Business Process Management | 10640 |
| 5 | Cybersecurity | 14154 |
| 6 | Data analytics using PowerBI (Edunet) | 22072 |
| 7 | Insurance service and operation | 18095 |
| 8 | Advanced Tally with GST | 42847 |
| 9 | Retail banking and wealth management | 11513 |
| 10 | Fintron | 10964 |
| 11 | Banking, Lending, NBFC II | 10264 |
| 12 | Insurance service and operation | 5250 |
| 13 | Consignment controller | 1510 |
| 14 | Exim documentation | 5920 |
| 15 | Business Process Management | 2691 |
| 16 | Fleet vehicle operation Management | 5097 |

| வ. எண் | பாடப்பிரிவு | பயிற்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 17 | Port logistics | 9766 |
| 18 | Data analytics using PowerBI | 6931 |
| 19 | Advanced Data analytics using Python | 13031 |
| 20 | EV battery management | 14564 |
| 21 | Medical coding | 5298 |
| 22 | Bioinformatics | 8042 |
| 23 | Food Analysis | 1637 |
| 24 | Organic food production techniques | 2044 |
| 25 | Agribusiness Management | 2072 |
| 26 | Tourist/Travel guide | 10985 |
| 27 | Digital Fashion Designing | 1930 |
| 28 | Content writing and Digital Marketing | 6723 |
| 29 | Story telling | 2915 |
| 30 | Graphic Design | 11317 |
| 31 | Digital Marketing | 25273 |
| **Total** | | **8,52,838** |

### 3.4 பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கான "நான் முதல்வன்" திட்டம்

2023- 2024 ஆம் கல்வியாண்டில் 9 தொழில்துறைப் பயிற்சி நிறுவனங்களுடன்

இணைந்து 8 பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அடுத்த பருவத்திற்கு 2 பாடப்பிரிவுகள், 4 தொழில்துறைப் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. மாணவர்களின் கற்றல் மற்றும் திறன் பெறும் ஆற்றலை மேம்படுத்தும் வகையில் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு முறையான திறன்களை உறுதி செய்யத் தொழில்துறையில் உள்ள பயன்பாட்டு நடைமுறைகள் மற்றும் மாதிரிகள் பயன்படுத்தப்படுகின்றன.

### 3.4.1 பயிற்றுநர்களுக்கானப் பயிற்றுவிப்பு மேம்பாட்டுத்திட்டம்

- 2023-2024 ஆம் கல்வியாண்டில் ஒற்றை எண் பருவத்திற்கானப் (Odd Semester) பேராசிரியர் பயிற்சி முகாம் (Faculty Development Program - FDP) 1949

பாலிடெக்னிக் பேராசிரியர்களுக்கு ஜூலை 2023 இல் நடத்தப்பட்டது.

- பிப்ரவரி 2024ல் 1753 பாலிடெக்னிக் ஆசிரியர்களுக்கு 2023-2024 கல்வியாண்டின் இரட்டை எண் பருவத்திற்கான (Even Semester) ஆசிரியர் பயிற்சி முகாம் (Faculty Development Program) நடத்தப்பட்டது

**3.4.2 பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கான பயிற்சித் திட்டத்தினைச் செயல்படுத்துதல் (முக்கியப் புள்ளி விவரங்கள்)**

- பதிவுசெய்யப்பட்ட பாலிடெக்னிக் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 459 ஆகும்.

- பதிவு செய்யப்பட்ட பாலிடெக்னிக் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1,92,784 ஆகும்.

- **அங்கீகரிக்கப்பட்ட தொழில்துறை பயிற்சி வழங்குநர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆகும்.**
- **கட்டாய திறன் படிப்புகளின் மொத்த எண்ணிக்கை 8 ஆகும்.**

**அட்டவணை 3.6**

**2023-2024 கல்வியாண்டில் ஒற்றை எண் பருவங்களுக்கானத்** (Odd Semester) **திறன் அடிப்படை கொண்ட பயிற்சிகளின் விவரம்**

| S. No. | Course | Total Students |
|---|---|---|
| 1 | English Essentials | 58,995 |
| 2 | Digital Skills | 38,868 |
| 3 | Employability Skills | 35,442 |
| 4 | Building Information Modelling | 4,892 |
| 5 | Industrial Metaverse using AR & VR | 6,925 |
| 6 | Printed Circuit Board (PCB) Design | 6,523 |
| 7 | Internet of Things and its Applications | 15,981 |
| 8 | Industry 4.0 and its Applications in Manufacturing Industries | 25,158 |
| **TOTAL** | | **1,92,784** |

## அட்டவணை 3.7

**2023-2024 கல்வியாண்டில் இரட்டை எண் பருவத்திற்கான (Even Semester) திறன் அடிப்படை கொண்ட பயிற்சிகளின் விபரம்**

| S. No. | Course | Total Students |
|---|---|---|
| 1 | Digital Skills (2nd Semester) | 30,997 |
| 2 | Employability Skills (2nd Semester) | 26,884 |
| 3 | Digital Skills (4th Semester) | 31,629 |
| 4 | Employability Skills (4th Semester) | 34,229 |
| **Total** | | **1,23,739** |

## அட்டவணை 3.8

**மண்டல வாரியான "நான் முதல்வன்" பயிற்சித் திட்டத்தில் பதிவு செய்த பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களின் விவரம்**

| வ. எண் | மண்டலத்தின் பெயர் | மாவட்டங்கள் | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சென்னை மண்டலம் | செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் | 20,305 |

| வ. எண் | மண்டலத்தின் பெயர் | மாவட்டங்கள் | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2 | மத்திய மண்டலம் | அரியலூர், திண்டுக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், நாகப்பட்டினம் | 35,386 |
| 3 | வடக்கு மண்டலம் | திருவண்ணாமலை இராணிப்பேட்டை, வேலூர், விழுப்புரம், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, கடலூர் | 35,550 |
| 4 | மேற்கு மண்டலம் | சேலம், நீலகிரி, திருப்பூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, தர்மபுரி, கோயம்புத்தூர் | 57,733 |
| 5 | தெற்கு மண்டலம் | திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், தேனி, தென்காசி, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை கன்னியாகுமரி | 43,810 |
| **மொத்தம்** | | | **1,92,784** |

## 3.5 தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான (ITI) “நான் முதல்வன்” திட்டம்

தமிழ்நாடு அரசின் திறன் மேம்பாட்டு முன்னெடுப்புகளின் கீழ், ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் தொழிற்பயிற்சி (ITI) மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு மேம்பாட்டிற்கான அடிப்படை ஆங்கில பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2023- 24 ஆம் கல்வியாண்டில் 4 தொழில்துறைப் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து பாடதிட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. மாணவர்களின் சரியான திறனை உறுதி செய்வதற்காக மூன்றாம் தரப்பு மதிப்பீட்டு கூட்டாளரால் முன் கண்டறியும் தேர்வு மற்றும் பிந்தைய மதிப்பீடு நடத்தப்படுகிறது.

## 3.5.1 தொழிற்பயிற்சி நிலைய (ITI) மாணவர்களுக்கான பயிற்சித் திட்டத்தினைச் செயல்படுத்துதல் (முக்கியப் புள்ளி விவரங்கள்)

- பதிவுசெய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களின் (ITI) மொத்த எண்ணிக்கை 412 ஆகும்.
- பதிவு செய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிலைய (ITI) மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 64,149 ஆகும்.
- அங்கீகரிக்கப்பட்ட தொழில்துறை பயிற்சி வழங்குநர்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆகும்.
- கட்டாய திறன் படிப்புகளின் மொத்த எண்ணிக்கை 1 ஆகும்.

**அட்டவணை 3.9**

**2023-2024 ஆம் கல்வியாண்டில் திறன் அடிப்படை கொண்ட பயிற்சிகளின் விவரம்**

| வ. எண். | பாடப்பிரிவு | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Basic English for Employability | 64.149 |

## அட்டவணை 3.10

## மண்டல வாரியான "நான் முதல்வன்" பயிற்சித் திட்டத்தில் பதிவு செய்த தொழிற்பயிற்சி நிலைய (ITI) மாணவர்களின் விவரம்

| வ. எண் | மண்டலத்தின் பெயர் | மாவட்டங்கள் | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சென்னை மண்டலம் | செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் | 11,437 |
| 2 | மத்திய மண்டலம் | அரியலூர், திண்டுக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், நாகப்பட்டினம் | 11,086 |
| 3 | வடக்கு மண்டலம் | திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, வேலூர், விழுப்புரம், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, கடலூர் | 12,508 |
| 4 | மேற்கு மண்டலம் | சேலம், நீலகிரி, திருப்பூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, தர்மபுரி, கோயம்புத்தூர் | 11,776 |
| 5 | தெற்கு மண்டலம் | திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், தேனி, தென்காசி, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை கன்னியாகுமரி | 17,342 |
| **மொத்தம்** | | | **64,149** |

### 3.6 வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சித் தொகுப்பு – "நான் முதல்வன்"

நான் முதல்வன் திறன் பயிற்சியின் பயனாக மாணவர்கள் தொழில்துறைக்கு தயாராகி வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு கலை மற்றும் அறிவியல் பாடப்பிரிவில் மொத்தம் 83,195 மாணவர்களும், பொறியியல் பிரிவில் 64,954 மாணவர்களும் மொத்தம் 1,48,149 மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. கலை மற்றும் அறிவியல் பட்டதாரிகளுக்கு ஊதிய வரம்பு ஆண்டுக்கு 3 முதல் 10 இலட்சம் வரையிலும், பொறியியல் பட்டதாரிகளுக்கு ஆண்டுக்கு 4 முதல் 40 இலட்சம் வரையிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ரிலையன்ஸ் ரீடெய்ல், டிசிஎஸ், விப்ரோ, எலூசியன், பெகாட்ரான், ஃபாக்ஸ்கான், அவாசாஃப்ட், பைஜூஸ், ஃப்ளோசர்வ் போன்ற

நிறுவனங்கள் தேர்வு செய்த சிறந்த தேர்வாளர்களில் கலை மற்றும் அறிவியல் மாணவர்களும் அடங்குவர்.

அமேசான் Morgan Stanley, Qualcomm, Paypal, Virtusa, Walmart, Zoho, Accenture, Adenza, Asian Paints, Delphi TVS Technologies BNY Mellon போன்ற நிறுவனங்கள் தேர்வு செய்த சிறந்த தேர்வாளர்களில் பொறியியல். மாணவர்கள் அடங்குவார்கள்.

இந்த ஆண்டு 2024, ஒருங்கிணைந்த வளாக வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, இதுவரை சுமார் 87,712 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாணவரையும் சென்றடையும் வகையில், மாநிலம் முழுவதும் ஒருங்கிணைந்த வளாக வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

நான் முதல்வனுக்கு பிரத்யேக வேலை வாய்ப்பு இணையதளம் (Portal) உள்ளது, இந்த

ஒருங்கிணைந்த வேலை வாய்ப்பு முகாம், தொழிற்சாலைகள் மற்றும் மாணவர்களை இணைக்கிறது. இந்த வேலைவாய்ப்பு இணையதளத்தில் தொழில் நிறுவனங்கள் பல்வேறு துறைகளின் கீழ் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம், பதிவுசெய்யப்பட்ட தொழில்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (Micro Small and Medium Entrepreneurs), தமிழ்நாடு அரசுத் தொழில் முன்னேற்றக் கழகம் (State Industries Promotion Corporation of Tamil Nadu), தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகம் (Directorate of Industrial Safety and Health), தமிழ்நாடு புத்தொழில் நிறுவனம், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (Electronics Corporation of Tamil Nadu), Guidance Tamil Nadu போன்ற பல்வேறு துறைகளால் சரிபார்க்கப்படுகின்றன. சரிபார்க்கப்பட்ட தொழில்துறையினர் வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்கலாம். மாணவர்களின் திறன்கள்

அடிப்படையில் தேடும்போது அவர்களை நிறுவனங்கள் கண்டறிய முடியும்.

வேலை வழங்குநர்கள், மாணவர்களைத் தெரிவு செய்யவும் தொழில் துறையின் தேவைகளுக்கேற்ப வேலைவாய்ப்புகளை அறிவிக்கவும் அனுமதி வழங்கப்படுகிறது. மாணவர்கள் திறன் தொகுப்பின் அடிப்படையில் வேலைவாய்புகளைத் தெரிந்து விண்ணப்பிக்கலாம். தொழில் நிறுவனங்கள் வேலைவாய்ப்பு இணையதளம் மூலம் மாணவர்களுக்குப் பணி நியமனக்கடிதத்தை வழங்குகிறது.

ஒருங்கிணைந்த வளாக வேலை வாய்ப்பு முகாம் தளங்கள் (Portal) மூலமாக நடத்தப்படுகின்றன. வேலை வாய்ப்பு முகாம் நடைபெறும் விவரங்கள் கால அட்டவணையிட்டு தளங்களில் (Portal) வைக்கப்பட்டுள்ளது. இத்தளங்களில் தொழில்துறையினர் மற்றும்

மாணவர்கள் திறன் சார்ந்த ஒருங்கிணைந்த தொகுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில்துறையினர் தேவைக்கேற்ப மாணவர்களின் திறன் அடிப்படையில் பணியமர்த்த வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அதே போன்று விண்ணப்பதாரர்களும் வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்பதற்காக பதிவு செய்கிறார்கள். ஒருங்கிணைந்த வேலைவாய்ப்புப் முகாம்கள் நடைபெறும்பொழுது உடனடி ஆட்சேர்ப்புக்கு மாணவர்களையும் தொழில் நிறுவனங்களையும் எளிதாக இத்தளம் இணைக்கும். மாணவர்களின் பதிவு முதல், மாணவர்களின் வருகையைக் குறிப்பது, மாணவர் நேர்முகத் தேர்வில் கலந்துகொண்ட நிறுவனங்கள், நேர்காணலின் நிலை/முடிவுகள் / அடுத்த கட்ட நேர்காணல்களுக்கான தேர்வு போன்ற முழுச் சுழற்சியும் எளிதாகக் கண்காணிக்கப்படும்.

**3.7 கல்லூரி கனவு**

நான் முதல்வன் "கல்லூரி கனவு" திட்டத்தின் 2024 பதிப்பு வெற்றிகரமாகத் துவங்கப்பட்டது . இதில் 12ஆம் வகுப்பு தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வழிகாட்ட வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான உயர்கல்வி வழிகாட்டுதல் திட்டமாகும். 75,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் பயனளித்த 2022 பதிப்பின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டு, நடப்பாண்டில் இத்திட்டம் இன்னும் அதிகமாக 1,12,000 மாணவர்களுக்கு உயர் கல்விக்கு வழிகாட்டுதலை வழங்கும் விதமாக 08.05.2024 முதல் 13.05.2024 வரை அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.

**3.8 உயர்வுக்குப் படி**

12ம் வகுப்பிற்கு பிறகு, மாணவர்கள் உயர் கல்வி படிப்பினை கைவிடும் போக்கை மாற்றியமைக்க, மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டமான “நான் முதல்வன் உயர்வுக்குப்படி திட்டமானது ”நிறுவன, சமூக அளவிலும் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

2022-2023 ஆம் கல்வியாண்டில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12வது வகுப்பு தேர்வில் தேர்ச்சிபெற்ற 3,23,456 மாணவர்களில் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் உயர்கல்விக்கு விண்ணப்பிக்க 2,40,460 மாணவர்களுக்குப் பள்ளிகளில் வசதி செய்யப்பட்டது. இத்திட்டத்தில் பங்கேற்காத மாணவர்கள் மாவட்ட வாரியாக அடையாளம் கண்டறியப்பட்டு மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சரின் வழிகாட்டுதலின் பேரில், அவர்களுக்கு மேலும் உயர் கல்வி வழங்க இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. நான் முதல்வன்

“உயர்வுக்குப் படி” திட்டமானது ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும் மூன்று கட்டங்களாக 22.06.2023 முதல் 08.07.2023 வரை நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்காகத் திரட்டப்பட்ட 30,269 மாணவர்களில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 7,884 பேர், பொறியியல் கல்லூரியில் 2,144 பேர், பாலிடெக்னிக் கல்லூரியில் 1,461 பேர், தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) 1,876 பேர் மற்றும் உயர்கல்வி பயிலும் 2,348 பேர் உட்பட 15,713 மாணவர்கள் தாங்கள் விரும்பும் உயர்கல்வியில் சேர வசதி செய்யப்பட்டுள்ளது.

### 3.9. உலகத் திறன்கள் 2024

TNSkill போட்டியில் 2023 இல் 55 திறன்கள் வகைப்படுத்தப்பட்டது. 2024 இல், TN-Skills Level-01 Skill Competition இல் பங்கேற்க சுமார் 53,995 விண்ணப்பதாரர்கள் இணைய தளம் மூலமாகப் பதிவு செய்திருந்தனர். முதல் நிலை போட்டித் தேர்வில் 18,518 பேர் கலந்துகொண்டதில் 2351 பேர்

இரண்டாம் நிலைப் போட்டியில் பங்கேற்க செய்முறை மதிப்பீடு உள்ளடக்கித் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 241 விண்ணப்பதாரர்கள் மூன்றாம் நிலை (அதாவது மாநில அளவிலான போட்டியில்) பங்கேற்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர், இதில் பூட்கேம்ப் மற்றும் சோதனை திட்ட அடிப்படையிலான மதிப்பீடும் அடங்கும். 2024 மே 15 முதல் 2024 மே 19 வரை புதுதில்லியின் துவாரகாவில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிக்கு (அதாவது இந்தியத் திறன்கள்) 61 திறன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 84 பேர் தேர்வு செய்யப்பட்டனர். சமீபத்தில் நடத்தப்பட்ட இந்திய திறன் போட்டியில் தமிழ்நாடு 6 தங்கப் பதக்கங்கள், 8 வெள்ளிப் பதக்கம் 9 வெண்கலப் பதக்கம் மற்றும் சிறப்புத் தகுதிக்கான 17 பதக்கங்கள் என மொத்தம் **40 பதக்கங்களுடன் 3-வது இடத்தைப் பிடித்தது. (2022ல் 23 பதக்கங்களுடன் 10 வது இடம்).**

## 3.10. நான்முதல்வன் மென்டார்ஷிப் தளம் (Mentorship Portal)

நன்கு கல்வி கற்று தொழில்துறையிலும் வெளிநாடுகளிலும் பல்வேறு நிறுவனங்களில் முன்னணி பதவி வகிக்கும் அறிஞர்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோர்களை கண்டறிந்து, அவர்களின் அறிவையும் அனுபவத்தையும் ஒரு தளத்தில் பகிர்வதற்கும் அவர்களையும், நான் முதல்வன் திட்ட மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் www.naanmudhalvanmentors.com எனும் இணையதள சேவை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் 29.02.2024 அன்று துவங்கி வைக்கபட்டது.

20.05.2024 அன்று வரை நான் முதல்வன் மென்டார்ஷிப் தளத்தில் தலைசிறந்த 160 கல்வியாளர்கள் பதிவு செய்து 72 மணி நேரம்

அனுபவ பகிர்வு செய்ததன் மூலம் சுமார் 50 ஆயிரம் மாணவர்கள் தற்போது வரை பயன்பெற்றுள்ளனர்

### 3.11 "நான் முதல்வன்" திறன் பதிவேடு

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள் அடங்கிய திறன் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொழில்துறைகள் ஒரு குறிப்பிட்ட திறன் தொகுப்பில் உள்ளவர்களைத் தெரிந்துகொள்ள உதவும் மற்றும் தொழிற் சந்தையில் கிடைக்கும் வேலை வாய்ப்புகளை அனைத்து மாணவர்களுக்கும் (கிராமப்புற மற்றும் நகர்ப்புர) வெளிப்படுத்தும் இந்தத் திறன் பதிவேடு கிராமப்புறங்களை உலகளாவிய வேலைவாய்ப்புகளுடன் இணைக்க உதவும். பல்வேறு புவியியல் பகுதிகளில் உள்ள பயிற்சி பெற்ற மனித வளங்களுக்கு ஏற்ப, புதிய அமைப்பு, விரிவாக்கம் மற்றும் அவற்றின் செயல்பாடுகளைப்

பல்வகைப்படுத்த திட்டமிடும் தொழில்களின் எதிர்கால திட்டமிடலுக்கு இது உதவும்.

## 3.12 நிரலோட்டம் (Hackathon) மூலம் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தைக் வெளிக்கொணர்தல்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அன்றாட வாழ்க்கையில் மற்றும் தொழிற் நிறுவனங்களில் எதிர்கொள்ளும் சில சவால்களுக்குப் புதுமையான தீர்வுகளைக் கண்டறியும் வகையில் நான் முதல்வன் நிரல் திருவிழா தளத்தை உருவாக்கியுள்ளது. மைக்ரோசாப்ட், கூகுள், ஆட்டோடெஸ்க் போன்ற பல்வேறு முன்னணி நிறுவனங்களுடனும், IIT-பாம்பே, IIT-மெட்ராஸ் முதலிய முன்னணிக் கல்வி நிறுவனங்களுடனும் இனணந்து பல நிரலோட்டப் போட்டிகள் மற்றும் உள்ளுரைப் பயிற்சிகள் நடந்து வருகின்றன.

இந்த முன்னெடுப்பானது தமிழ்நாட்டிற்குப் படைப்பாற்றல், புதுமை, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் குறித்து உறுதியானத் தீர்வுகளை வழங்க உதவும். இது 21 ஆம் நூற்றாண்டின் திறன் தேவை மற்றும் வேலைவாய்ப்பின் முக்கிய சவால்களை எதிர்கொள்ளும் நிலையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது நிறுவனங்களுக்குத் தொழில்துறைக் கோரிக்கைகளைப் புரிந்து கொள்வதற்கும் தற்போதைய தேவைக்கேற்ப அவர்களின் கல்விமுறையை மறுசீரமைப்பதற்கும் வாய்ப்பளிக்கிறது.

### 3.13. நான் முதல்வன் – போட்டித் தேர்வுகள்

நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவானது ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வாணயங்கள் நடத்தும் பல்வேறு போட்டித்தேர்வுகளில் தமிழ்நாட்டு இளைஞர்கள்

வெற்றி பெற ஊக்கம் அளிக்கும் நோக்கத்துடன் மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களால் மார்ச் 7, 2023 அன்று தொடங்கிவைக்கப்பட்டது. இப்பிரிவானது ஒன்றிய அரசுத் தேர்வு முகமைகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு அனைத்து விதமான பயிற்சிகள் மற்றும் தேவையான உதவிகள் செய்து தமிழ்நாட்டு இளைஞர்களின் திறனை உயர்த்தி அவர்களை அதிக எண்ணிக்கையில் வெற்றிபெறச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணயம் (UPSC) நடத்தும் குடிமைப் பணித் தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில், தமிழ்நாடு வரவு-செலவுத் திட்டம் 2023-2024-இல் ஒரு சிறப்பு ஊக்கத்தொகை திட்டம்

அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் 1,000 குடிமைப் பணித் தேர்வு விண்ணப்பதாரர்கள் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள். இவ்வாறு, தேர்வான 1000 மாணவர்கள் அவர்களின் முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500 ரூபாய் வழங்கப்படும். முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு ரூ.25,000 (ரூபாய் இருபத்தைந்தாயிரம்) வழங்கப்படும்.

நான் முதல்வன் குடிமைப் பணி முதன்மைத் தேர்வுக்கான ஊக்கத்தொகைத் திட்டமானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 07.08.2023 அன்று துவங்கி வைக்கப்பட்டது. இதில் 2023 ஆம் ஆண்டுக்கான குடிமைப்பணி முதல் நிலைத் தேர்வில் வெற்றி பெற்ற 453 மாணவர்களுக்குத் தலா 25000 ரூபாய் வீதம்,

ஒரு கோடியே பதின்மூன்று லட்சத்தி இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

நான் முதல்வன் முதன்மைத் தேர்வுக்கான உதவித்தொகை பயனாளிகளான 453 பேரில் 117 பேர் குடிமைப்பணி நேர்முகத் தேர்வுக்குத் தேர்வு செய்யப்பட்டனர், அவர்களில் 39 பேர் 2023-2024 ஆம் ஆண்டுக்கான குடிமைப்பணி தேர்வுக்கான இறுதிப்பட்டியலில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும் அகில இந்திய வனப்பணிக்கான தேர்வில் தேர்வாகியுள்ள தமிழ்நாட்டை சேர்ந்த 8 நபர்கள் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உதவிப்பெற்ற பயனாளிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

குடிமைப்பணிகள் முதல் நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்காக, மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 மாணவர்களுக்கு மாதந்தோறும் தலா 7500 ரூபாய் வீதம் செப்டம்பர் 2023 முதல் பத்து மாதங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு இளைஞர்

நலன், விளையாட்டு மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், 14.10.2023 அன்று துவங்கி வைத்தார்கள். நான் முதல்வன் குடிமைப் பணிகள் முதல்நிலைத்தேர்வு ஊக்கத்தொகை திட்டம் பயனாளிகள் மட்டுமின்றி பயனாளிகளின் பெற்றோராலும் பாராட்டப்படுகிறது. இந்த ஊக்கத்தொகைத் திட்டமானது, போட்டித்தேர்வாளர்கள் தங்களுக்கு தேவையான பயிற்சி ஏடுகள் மற்றும் வளங்களைச் சிறந்த முறையில் அணுக உதவுவதன் மூலம் வரவிருக்கும் குடிமைப் பணிகள் தேர்வு 2024 இல் வெற்றிக்கான வாய்ப்புகளைஅதிகரிக்கும். மேலும், இத்திட்டத்தின் மூலம் நாட்டின் தலைமைப் பதவிகளில் அதிக தமிழ் இளைஞர்களைக் கொண்டு செல்வதே நோக்கமாகும். உலகை வெல்லும் இளைய சமுதாயத்தை உருவெடுக்க முயற்சி எடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் இது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

குடிமைப் பணிகள் முதல்நிலைத் தேர்வு மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான ஊக்கத்தொகை திட்டங்களின் தொடர்ச்சியாக, மத்திய அரசின் பணியாளர் தேர்வாணையம் (SSC) ரயில்வே (RRB) மற்றும் வங்கித் தேர்வுகளில் (IBPS) தேர்ச்சி பெறும் தமிழ்நாடு இளைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு வரவு-செலவுத் திட்டம் 2024-2025 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த உண்டு உறைவிட சிறப்புப் பயிற்சித் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் தலா 1,000 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு சென்னை, கோவை, மதுரை ஆகிய பகுதிகளில் ஆறு மாதங்களுக்குத் தங்கும் வசதியுடன் தரமான பயிற்சி அளிக்கப்படும். இதற்காக இந்த ஆண்டு தமிழ்நாடு வரவு-செலவில் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## III. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

வரலாற்றின் பக்கங்களை ஆராயும்போது, ஆரம்பகாலத்திலிருந்தே மனிதகுலத்தை வழிநடத்தியது தாய்வழி சமூகங்கள் என்பதை நாம் காண்கிறோம். வேளாண் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டு வேளாண் சமுதாயமாக மாறிய பிறகும் பெண்களின் பங்களிப்பு ஆண்களுக்கு நிகராகவே இருந்தது. ஆனாலும், காலப்போக்கில் மதம் மற்றும் பண்டைய பாரம்பரியத்தின் பெயரால் பெண்கள் தங்கள் வீடுகளுக்குள் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டனர். அவர்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. பெண்களின் கடின உழைப்பு அங்கீகரிக்கப்படவில்லை. பெண்களைக் கட்டுப்படுத்தும் ஒடுக்குமுறைத் தடைகளைத் தகர்க்கவும், அவர்கள் மீது சுமத்தப்பட்ட அடிமைச் சங்கிலிகளை ஒழிக்கவும், ஏராளமான சமூக

சீர்திருத்தவாதிகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தனர். இவர்களின் முயற்சியின் பலனாகப் பள்ளி, கல்லூரிகளில் சேரும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து கல்வியில் சிறந்து விளங்குகின்றனர். அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகளில் வெற்றிகரமாகத் தேர்ச்சி பெறும் பெண்களின் சதவீதம் அதிகரித்து வருவது தமிழ் சமூகத்தின் முற்போக்கான தன்மையை எடுத்துக் காட்டுகிறது. பல குடும்பங்களில், குறிப்பாக ஏழ்மையான குடும்பங்களின் முதுகெலும்பாகவும், பொருளாதார ரீதியில் ஆதரவளிப்பதிலும் பெண்கள் தொடர்ந்து முக்கியப் பங்காற்றுகின்றனர் என்பதை மறுக்க முடியாது.

உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கையில் (Global Gender Gap Report -2023), தரவரிசைப்படுத்தப்பட்ட 146 நாடுகளில், இந்தியா 127ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. வாங்கும்

திறன் அடிப்படையில், பெண்களின் உலகளாவிய சராசரி ஆண்டு வருமானம் சுமார் $11,000 என்றும், அதே வேளையில், ஆண்களின் சராசரி ஆண்டு வருமானம் $21,000 என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, ஆண்களின் வருமானத்தை விட, பெண்கள் ஏறக்குறைய சரிபாதி அளவுக்குத்தான் வருமானம் ஈட்டுகிறார்கள். உலகளாவிய அளவில், ஆண்டு வருமானத்தில் பாலின அடிப்படையில் பெரிய அளவில் மாறுபாடு இருப்பதாகவும் இந்த ஆய்வறிக்கை கண்டறிந்துள்ளது.

இவற்றை நிவர்த்தி செய்ய ஏதுவாக "பொது அடிப்படை வருமானம்" என்ற பெயரில் உலகின் கீழ்காணும் நாடுகளில் மற்றும் நம் நாட்டின் சில மாநிலங்களில் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

1. **உலகில் காணும் பணப் பரிமாற்றத் திட்டங்கள்:**

   i. PROGRAMA BOLSA FAMILIA பிரேசில் (PBF-2002 முதல்) – நிபந்தனையுடன் கூடிய பணப் பரிமாற்றத் திட்டத்தினால் ஒவ்வொரு ஆண்டும் 11.1 மில்லியன் (1.10 கோடி) குடும்பங்கள் பயனடைந்து வருகின்றது. பெண் குடும்பத் தலைவிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பண பரிமாற்றம் செய்யப்படுகிறது.

   ii. MEXICO INCOME SUPPORT PROGRAMME - PROSPERA (1997-2019) – தகுதியுடைய குடும்பங்களுக்கு நிபந்தனையுடன் கூடிய பணப் பரிமாற்றத் திட்டம்

2. இந்திய மாநிலங்களில் காணும் பணப் பரிமாற்றத் திட்டங்கள்

   i. LAKSHMIR BHANDAR SCHEMES மேற்கு வங்காளம் (2021 முதல்)

ii. MUKHYA MANTRI LADLI BEHNA YOJANA மத்திய பிரதேசம் (2023 முதல்)

iii. GRUHA LAKSHMI SCHEMES கர்நாடகா (2023 முதல்) -

இத்தகைய பணப் பரிமாற்றங்கள் பெண்களுக்கு அதிகாரம் அளித்து, குழந்தைகளுக்குச் சிறந்த பலன்களை வழங்குகின்றன. பெண்களுக்கு குடும்பத்தில் கூடுதல் வளங்கள் வழங்கப்படும் போது, குடும்பச் செலவினம் தொடர்பான குடும்ப முடிவுகளில் அவர்களின் பங்களிப்பானது அதிகரிக்கிறது.

'ஆணுக்கிங்கே பெண் நிகர்' என்னும் சமத்துவப் பாதையில் தமிழ்நாடு அரசு பல்வேறு மகளிர் நலத்திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. இவ்வகையில் கணக்கில் கொள்ளப்படாத பெண்களின் உழைப்பை முறையாக அங்கீகரித்திடவே மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர்

அவர்களால், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கி, கல்வியிலும் வேலைவாய்ப்பிலும், உள்ளாட்சி அமைப்புகளிலும் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது. பெண் உரிமை போற்றிட்ட, கலைஞர் அவர்களின் பெயரால் இந்த மகளிர் உரிமைத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. எனவேதான், இந்தத் திட்டத்திற்கு மகளிருக்கான உதவித் தொகை என்று இல்லாமல் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' என்று கவனத்துடன் பெயரிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 27.03.2023 அன்று அறிவிக்கப்பட்ட திருப்பு முனை ஏற்படுத்தும் இப்புதிய முன்னோடி திட்டம் உரிய வழிமுறைகளை பின்பற்றி குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்க வழிவகை செய்கிறது. இத்திட்டம் குடும்பத்திற்காக வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக்

கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் அங்கீகாரம் கொடுப்பதற்கான முக்கிய திட்டமாகும். பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் இத்திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று தொடங்கப்பட்டது.

**3. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய உதவும் திட்டம்.**

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது அனைவருக்கும் சிறந்த மற்றும் நிலையான எதிர்காலத்தை அடைவதற்கான வரைபடமாகும். வறுமையை ஒழிப்பதது என்பது பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்பும் உத்திகளுடனும் மற்றும் கல்வி, சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்புகள், காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பைச் சமாளித்தல் போன்ற பல்வேறு சமூகத்

தேவைகளை நிவர்த்தி செய்வதுடனும் கைகோர்த்துச் செல்ல வேண்டும்.

சமூக நிலைத்தன்மை மற்றும் பொருளாதார நிலைத்தன்மையுடன் தொடர்புடைய இலக்குகளை அடைய கலைஞர் மகளிர் உரிமை திட்டம் வழிவகுக்கிறது.

இத்திட்டத்தின் மூலம், கிடைக்கப் பெறும் தொகை அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவுவதுடன், சேமிப்புப் பழக்கங்களை மேம்படுத்தி, சிறு சொத்துக்கள் மற்றும் நீண்ட கால முதலீடுகளை உருவாக்கவும் உதவுவதால் கீழ்க்கண்ட நீடித்த நிலையான வளர்ச்சிகளை அடைய உதவுகிறது.

- நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 1: வறுமை ஒழிப்பு - அனைத்து இடங்களிலும் அனைத்து வகையிலான ஏழ்மையை ஒழித்தல்.
- நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு - 2: பட்டினி இல்லா நிலை - உணவு

பாதுகாப்பையும், ஊட்டச்சத்து மேம்பாட்டையும் அடைதல் நிலையான வளங்குன்றா வேளாண்மையை மேம்படுத்துதல்.

- நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு-3: நல்வாழ்வு - அனைவருக்கும் அனைத்து வயதிலும் ஆரோக்கியமான வாழ்வை உறுதி செய்தல் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல்.
- நிலையான வளர்ச்சி இலக்கு-5: பாலின சமத்துவம் – பாலின சமத்துவத்தை எய்துவதன் வாயிலாக அனைத்து பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் அதிகாரமளித்தல்.

கலைஞர் மகளிர் உரிமை திட்டத்திற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள், அரசாணை நிலை எண் 15, சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை, நாள் 10.07.2023-ல் வெளியிடப்பட்டது.

## 4. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பயன்பெறத் தேவையான தகுதிகள்

i. குடும்பத் தலைவிகளுக்கான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன் பெற, கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்ற குடும்பங்களில், 21 வயது நிரம்பிய பெண் ஒருவர் விண்ணப்பிக்கலாம். அதாவது, செப்டம்பர் 15, 2002 -ஆம் தேதிக்கு முன்னர் பிறந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ii. இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு பயனாளி மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியானவர்

### 4.1 குடும்பத்தலைவி வரையறை

i. குடும்ப அட்டையில் பெயர் இடம் பெற்றுள்ளவர்கள் அனைவரும் ஒரு குடும்பமாகக் கருதப்படுவர்.

ii. ஒவ்வொரு தகுதி வாய்ந்த குடும்பத்திலும் உள்ள குடும்பத் தலைவி கலைஞர் மகளிர்

உரிமைத் திட்டத்தில் பயன் பெற விண்ணப்பிக்கலாம்.

iii. குடும்ப அட்டையில் குடும்பத் தலைவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள பெண் குடும்பத் தலைவியாகக் கருதப்படுவார்.

iv. குடும்ப அட்டையில் ஆண் குடும்பத் தலைவராகக் குறிப்பிடப்பட்டிருந்தால், அந்தக் குடும்பத் தலைவரின் மனைவி குடும்பத் தலைவியாகக் கருதப்படுவார்

v. குடும்ப அட்டையில் ஆண் குடும்பத் தலைவரின் மனைவியின் பெயர் ஏதேனும் காரணத்தினால் இல்லாத பட்சத்தில், குடும்பத்தில் உள்ள இதர பெண்களில் ஒருவர் குடும்பத் தலைவியாகக் கருதப்படுவார். ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட 21 வயது நிரம்பிய பெண்கள் இருந்தால், இத்திட்டத்தின் கீழ்

பயன்பெற, ஒரு நபரைக் குடும்ப உறுப்பினர்கள் தேர்வு செய்து விண்ணப்பிக்கச் செய்யலாம்.

vi. திருமணமாகாத தனித்த பெண்கள், கைம்பெண்கள் மற்றும் திருநங்கைகள் தலைமையில் குடும்பங்கள் இருந்தால் அவர்களும் குடும்பத் தலைவிகளாகக் கருதப்படுவர்.

### 4.2 பொருளாதார தகுதிகள்

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன் பெற விண்ணப்பிக்கும் குடும்பங்கள் கீழ்க்காணும் மூன்று பொருளாதார அளவுகோல்களுக்கு உட்பட்ட குடும்பங்களாக இருத்தல் வேண்டும்.

i. ஆண்டுக்கு ரூ.2.5 இலட்சத்திற்குக் கீழ் வருமானம் ஈட்டும் குடும்பங்கள்.

ii. ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நன்செய் நிலம் அல்லது பத்து ஏக்கருக்குக்

குறைவாகப் புன்செய் நிலம் வைத்துள்ள குடும்பங்கள்.

iii. ஆண்டிற்கு வீட்டு உபயோகத்திற்கு 3600 யூனிட்டிற்கும் குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் குடும்பங்கள்.

## 5. திட்டத்தில் பயன் பெறத் தகுதி இல்லாதவர்கள்

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன் பெற விண்ணபிக்கும் விண்ணப்பதாரரின் குடும்ப உறுப்பினர்களில் யாரேனும், கீழ்க்காணும் ஏதாவது ஒரு வகையைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்களாக இருந்தால், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர், மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதி இல்லாதவர் ஆவர்.

i. ரூபாய் 2.5 இலட்சத்திற்கு மேல் ஆண்டு வருமானம் ஈட்டும் குடும்பங்கள்.

ii. குடும்பத்தில் ஆண்டு வருமானம் ரூபாய் 2.5 இலட்சத்திற்கு மேல் ஈட்டி வருமானவரி

கணக்கு தாக்கல் செய்பவர்கள் மற்றும் வருமான வரி செலுத்துபவர்கள்.

iii. ஆண்டுக்கு ரூ.2.5 இலட்சத்திற்கு மேல் வருமானம் ஈட்டி தொழில் வரி செலுத்துவோர்.

iv. மாநில, ஒன்றிய அரசு ஊழியர்கள் / பொதுத்துறை நிறுவனங்கள் / வங்கிகளின் ஊழியர்கள், வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகளின் ஊழியர்கள் மற்றும் அவற்றின் ஓய்வூதியதாரர்கள்.

v. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் (ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்களைத் தவிர). அதாவது பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத்

தலைவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள்.

vi. சொந்தப் பயன்பாட்டுக்கு கார், ஜீப், டிராக்டர், கனரக வாகனம் போன்ற நான்கு சக்கர வாகனங்கள் வைத்துள்ளவர்கள்.

vii. ஆண்டுக்கு ரூ.50 இலட்சத்திற்கும் மேல் ஆண்டு விற்பனை (Annual turnover) செய்து சரக்கு மற்றும் சேவை வரி (GST) செலுத்தும் தொழில் நிறுவன உரிமையாளர்கள்

6. **விதிவிலக்குகள்**

i. மாற்றுத் திறனாளிகள் நலத்துறையால் வழங்கப்படும் அறிவுசார் மாற்றுத்திறன் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறன், முதுகுத்தண்டுவடம் / தண்டுவடம் மறப்பு நோய் மற்றும் பார்க்கின்சன் நோய் மாற்றுத் திறன், தசைச்சிதைவு நோய் மாற்றுத்திறன், தொழுநோய் மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித் தொகை பெறும்

உறுப்பினரைக் கொண்ட குடும்பங்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவை. இவ்வகைப்பாட்டினர் திட்டத்தின் பிற தகுதிகளைப் பூர்த்தி செய்து எவ்விதத் தகுதியின்மை வகைப்பாட்டிலும் வரவில்லை எனில் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்.

ii. இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களிலிருந்து முதியோர் ஓய்வூதியம் பெறும் குடும்பங்களில் உள்ள ஓய்வூதியதாரர் அல்லாத தகுதி வாய்ந்த பெண்களும் திட்டத்தின் பிற தகுதிகளைப் பூர்த்தி செய்து எவ்வித தகுதியின்மை வகைபாட்டிலும் வரவில்லை எனில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்.

iii. வருவாய்த் துறையின் கீழ் மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் பெறும் மாற்றுத்திறனாளிகள் தவிர, அக்குடும்பத்தில் உள்ள தகுதிவாய்ந்த பெண்களும் திட்டத்தின் பிற தகுதிகளைப் பூர்த்தி செய்து எவ்வித தகுதியின்மை வகைபாட்டிலும் வரவில்லை எனில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்.

## 7. முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கான திட்ட விரிவாக்கம்

தமிழ்நாடு அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் 29 மாவட்டங்களில் 106 முகாம்களில் உள்ள 19,487 முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குடும்பங்களைச் சார்ந்த குடும்பத் தலைவிகளும், இத்திட்டத்தின் தகுதிகளை நிறைவுச் செய்யும் பட்சத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற தகுதியானவர்கள்.

## 8. மேல்முறையீடு (Appeal)

கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட விண்ணப்பதார்களின் தகுதிகள் சரிபார்க்கப்பட்டு அரசாணையில் குறிப்பிடப் பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும், தகுதியின்மைக்கு உள்ளான விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டு விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தியானது அவர்களது பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு அனுப்பி வைக்கப்படும்.

நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மேல்முறையீடு செய்ய விருப்பினால் நிராகரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாள்களுக்குள் இ- சேவை மையம் வழியாக மேல்முறையீடு செய்ய வழிவகை செய்யப்பட் டுள்ளது. இவ்வாறு மேல்முறையீடு செய்தவர்களில் 1 இலட்சத்து 48 ஆயிரம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

## 9. செயல்படுத்தும் துறைகள்

இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நிர்வாகத் துறை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை ஆகும். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சமூகப் பாதுகாப்புத் திட்ட ஆணையர், நிர்வாக ரீதியாக இத்திட்டத்தைச் செயல்படுத்தும் துறைத் தலைவராகச் செயல்படுவார்.

## 10. இத்திட்டத்தைச் செயல்படுத்த புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக வருவாய் நிருவாக ஆணையரகத்தின் கீழ்கண்டவாறு தலைமையிடம் மற்றும் 38 மாவட்டங்களில் புதியதாக 123 பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை 10.1
## பணியிடங்களின் விவரம்
## (வருவாய் நிருவாக ஆணையரகத்தின் கீழ்)

| வ. எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணை ஆணையர் / மாவட்ட வருவாய் அலுவலர் | 1 |
| 2. | முதன்மை கணக்கு அலுவலர் | 1 |
| 3. | கணக்கு அலுவலர் / உதவி கணக்கு அலுவலர் | 1 |
| 4. | துணை ஆட்சியர் / உதவி ஆணையர் | 1 |
| 5. | துணை வட்டாட்சியர்/ கண்காணிப்பாளர் /MIS/ கணினி பகுப்பாய்வாளர் | 2 |
| 6. | உதவியாளர்/ Multi Tasking Staff | 6 |
| 7. | அலுவலக உதவியாளர் | 2 |
| **மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை** | | **14** |

## அட்டவணை 10.2

## பணியிடங்களின் விவரம் (மாவட்ட நிருவாகத்தின் கீழ்)

| வ. எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தலைமை உதவியாளர்/ துணை வட்டாட்சியர் | 94 (சார் ஆட்சியர் / கோட்டாட்சியர் அலுவலகம்) தலா ஒரு பணியிடம் |
| 2. | துணை வட்டாட்சியர் | 7 (மண்டல துணை வட்டாட்சியர் பணியிடம் ஒதுக்கீடு இல்லாத வட்டங்களுக்கு) |
| 3. | தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) | 8 (தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) பணியிடம் ஒதுக்கீடு இல்லாத வட்டங்களுக்கு) |

## 11. நிதி ஒதுக்கீடு

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கென 2023-24-ஆம் நிதியாண்டில் ரூ.8123.83 கோடி ஒதுக்கீடும், 2024-25-ஆம்

நிதியாண்டிற்க்கென ரூ.13,722.47 கோடி நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 31.03.2024 முடிய, முகாம் வாழ் இலங்கை தமிழர் குடும்பங்களைச் சார்ந்த 14,723 மகளிர் உட்பட 1,15,27,172 மகளிர் பயனடைந்து வருகின்றனர்.

## IV. தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் (TNWeSafe)

தமிழ்நாடு, 2022-23ம் நிதியாண்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.7% பங்களிப்பினை அளித்து, இந்தியாவின் பொருளாதாரத்தில் இரண்டாவது இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டின் சராசரி எழுத்தறிவு விகிதம் 80% அதே சமயம் இந்தியாவின் சராசரி எழுத்தறிவு விகிதம் 73% ஆகும். தமிழ்நாட்டின் பல்பரிமாண வறுமை குறியீடு (Multi-dimension Poverty Index) 2.2% ஆகும். அதே சமயம், இந்தியாவின் பல்பரிமாண வறுமை குறியீடு 14.96% ஆகும். இவ்வொப்பீட்டில் தமிழ்நாடு மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டில் பெருமைமிகு இடத்தினை பெற்றுள்ளது.

இம்மாநிலமானது விரைவான நகர்ப்புற வளர்ச்சியினை அடைந்துவருகின்றது. 1991 ல் 34% ஆக இருந்த நகர்ப்புற மக்கள்தொகை வளர்ச்சி

விகிதம் 2021 ல் 53% ஆக உயர்ந்துள்ளது. 2030 ம் ஆண்டிற்குள் இது 67% ஆக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழ்நாட்டின் பொருளாதாரம் வேளாண் மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களிலிருந்து (மாநில உள்நாட்டு உற்பத்தியில் 13%) மாற்றமடைந்து சேவை தொழில்கள் சார்ந்ததாகவும் (53% மாநில உள்நாட்டு உற்பத்தி) மற்றும் தொழில் / உற்பத்தி துறை சார்ந்ததாகவும் (34% மாநில உள்நாட்டு உற்பத்தி) மாறி உள்ளது. இதில் ஆயத்த ஆடைகள், தானியங்கி வாகனங்கள், உணவுப்பொருட்கள் மற்றும் தோல் சார்ந்த தொழில்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.

ஆயினும் தமிழ்நாட்டில் பெண்கள் மிகக்குறைந்த ஊதியம் பெறும் முறைசாரா பணிகளிலேயே பெரும்பாலும் பணியமர்த்தப் படுகின்றனர். பெண் தொழிலாளர் பங்களிப்பு விகிதம்' 2022-2023ம் நிதியாண்டில் 43.9% ஆகும்.

ஆனால், ஆண் தொழிலாளர் பங்களிப்பு விகிதமான 81.2% சதவீதத்துடன் ஒப்பிடும் பொழுது இது மிகக் குறைவாகும். மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் 2022-23-க்கான தொழிலாளர் எண்ணிக்கை ஆய்வின்படி, பாலின இடைவெளியின் அடிப்படையிலான தொழிலாளர் பங்களிப்பு விகிதம் ஊரகப்பகுதிகளைக் காட்டிலும் (28.3% புள்ளிகள்) நகர்புறப்பகுதிகளில் அதிகமாக அமைந்துள்ளது (49.4% புள்ளிகள்). பொது இடங்களில் பாதுகாப்புக் குறைபாடு, சமமற்ற குடும்பப் பொறுப்புப் பகிர்வு முறை, பாலின இடைவெளியுடைய ஊதிய முரண்கள், பணியிடங்களில் காணப்படும் சமமற்ற பணி முன்னேற்றங்கள் மற்றும் பிற கட்டமைப்புத் தடைகள் ஆகியன பெண் தொழிலாளர் பங்களிப்பு விகிதத்தினை குறைக்கும் காரணிகளாக அமைந்துள்ளன.

2030ல் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர்கள் பொருளாதாரம் என்னும் தமிழ்நாட்டின் இலக்கினை நிறைவு செய்யப் பெண்களை முறைசார்ந்த தொழில்களில் ஈடுபடச் செய்வதும், உயர் தரப் பணிகளில் பங்கேற்கச் செய்வதும் அவசியமாகும். இது மாநிலத்தின் உள்நாட்டு உற்பத்தி விகிதத்தினை(GDP) அதிகரித்து மாநிலத்தின் வளர்ச்சியில் பங்காற்ற உறுதுணையாக அமையும். தமிழ்நாட்டின் இந்த இலக்கினை நிறைவேற்றச் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கீழ் தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டமானது (TNWesafe) உலக வங்கியின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் ஆகிய துறைகளின் இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டம் மாநில அளவில் மாநில திட்ட மேலாண்மை அலகாகவும் மாவட்ட அளவில் மாவட்ட திட்ட மேலாண்மை அலகாகவும் அமைக்கப்பட்டு உரிய சட்டவிதிகளின்படி சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. மாநில திட்ட மேலாண்மை அலகானது திட்ட நடவடிக்கைகளுக்காகச் சம்மந்தப்பட்ட துறைகளுடன் இணைந்து திட்டத்தினை நிர்வகிக்கும் அலகு ஆகும். மாவட்ட திட்ட மேலாண்மை அலகானது மாவட்ட சமூக நல அலுவலர், பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், மற்றும் மாவட்ட திட்ட மேலாளர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகியோருடன் இணைந்து திட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும்.

வேளாண்மை சாரா உயர் தரமான பணிகள் மற்றும் வளரும் தொழில் பிரிவுகளில் உள்ள பணிகள் ஆகியவற்றை பெண்கள் பெற வழிவகை

செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்காக வரும் ஐந்து ஆண்டுகளுக்கு (2024-2029) உலக வங்கி 150 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.1185 கோடி) கடனுதவி வழங்கியுள்ளது. இத்திட்டமானது பின்வரும் நோக்கங்களுக்காகச் செயல்படுத்தப்படுகிறது.

1. **பணியமர்த்தல்** (EMPLOY) : வளர்ந்து வரும் துறைகளின் தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்களிப்பினை அதிகரித்தல்.
2. **வசதிப்படுத்துதல்** (ENABLE): பெண்களின் வேலை வாய்ப்புகளை அதிகரிக்க உரிய வசதிகளைச் செய்து கொடுத்தல்
3. **அதிகாரமளித்தல்** (EMPOWER): பெண்களின் வேலைவாய்ப்புக்களுக்காக மாநிலத்தின் திறன்களை மேம்படுத்துதல், தொழில்நுட்ப பங்களிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் அமைப்புரீதியான கட்டமைப்புகள் ஆகியவற்றினை பலப்படுத்துதல்.

தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டமானது (TNWeSafe) 2024 முதல் 2029 வரையிலான ஐந்தாண்டு காலத்திற்கு ரூபாய் 1185 கோடி செலவில் ஒன்பது முன்னோடித் திட்டங்களைப் பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்காக நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

i. **Womenomics** : மாநில அளவில் பெண்களுக்கான உயர்தர வேலைவாய்ப்புத் திட்டம் (Quality Employment Plan) உருவாக்குதுல். பெண்களின் திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பினை அதிகரித்தல், மகளிரை தொழில் முனைவோர்களாக ஆக்குவதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் பாதுகாப்பான பணிசூழலை பணிபுரியும் இடங்களில் உருவாக்குதற்காக

நாட்டிலேயே முதன்முதலாகச் செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும்.

ii. **Women Information Bank:** பல தகவல்களை உள்ளடக்கிய ஒரு தளத்தினை (Multisectoral Platform) உருவாக்குவதன் மூலம் பெண்களின் பணிவாய்ப்பு, தொழில் முனைவு, வழிகாட்டல் நடைமுறைகள் (Mentorship), கல்வி, பயிற்சிகள், பணிவாய்ப்புகளுக்குரிய ஆலோசனைகள், உளவியல் ஆலோசனைகள், பராமரிப்பு வசதிகள், அடிப்படை கட்டமைப்புகள் குறித்த தகவல்களை உள்ளடக்கிய தளமாக (One stop Platform) அமைய உள்ளது.

iii. **SHENERGY** : இந்த முன்னோடித் திட்டத்தின் மூலம் பெண்களின் பணிவாய்ப்பு, தொழில் முனைவு ஆகியவற்றினை மேம்பட்ட வசதிகளுடனும் பாதுகாப்பு வசதிகளுடனும் வழங்க உரிய

வழிகாட்டுதல், விழிப்புணர்வு வழங்கப்பட உள்ளது.

iv. **திறன்சுடர்**: மாணவிகளுக்குத் திறன் மேம்பாடு, தொழிற்பயிற்சி (Apprenticeship), உள்ளுறைப் பயிற்சி (Internship), மற்றும் பிற செய்முறை பயிற்சிகள் ஆகியவற்றினை பள்ளிகள் மற்றும் கல்லுரிகளில் வழங்குவதன் மூலம் அவர்களின் திறன் மேம்படும்.

v. **கலங்கரை**: திறன் மதிப்பீட்டுத் தளத்தினை (Talent Assessment Portal) உருவாக்குவதன் மூலம் மாணவிகளுக்கு உளவியல் சார்ந்த தேர்வுகள் நடத்துவது, "ஒரு நாள் உங்கள் கனவு" திட்டத்தின் மூலம் மாணவிகள் பல்வேறு துறைகளின் வெற்றியாளர்களைப் பின்தொடர்ந்து கற்க உதவுவது, அறிவியல் தொழில்நுட்பம் பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகிய தளங்களில் அடிப்படை அறிவினை அளிப்பது, சிறப்புப்

பாடத்திட்டங்கள் மூலம் திறன் மற்றும் பணிவாய்ப்புகளை அனைத்து மாணவர்களுக்கும் மேம்படுத்துவது ஆகியவை இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன.

vi. **தொழில் விதை** : அனைத்து நிலைகளிலும் உள்ள பெண் தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்குவது, மண்டல அளவில் உள்ளுறை மையங்களை (Incubation Centre) அமைத்துத் தொழில் முனைவினை ஊக்கப்படுத்துதல், குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறையின் உதவியுடன் பல்வேறு குறுகிய காலப் பயிற்சிகள் வழங்குதல் ஆகியவை இந்த முன்னோடித் திட்டத்தில் அடங்கும்.

vii. **தொழிலணங்கு**: மண்டல மையங்களை (Regional Hubs) தமிழகம் முழுவதும் மண்டல வாரியாக அமைத்து வளர்ந்து வரும் பெண் தொழில் முனைவோருக்கு பயிற்சி

(Training), **வழிகாட்டல்** (Mentoring), **திறன் வழங்கல்** (Skilling), **உள்ளூறை சேவைகள்** (Incubation Services), **தொழில் முடுக்கச் சேவைகள்** (Acceleration Services) **என அனைத்து சேவைகளையும் ஒரே குடையின் கீழ் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.**

viii. **அன்புக்குடில்:** குழந்தைகள் காப்பகம், பள்ளிக்குப் பிறகான காப்பக வசதி, சமுதாய முதியோர் பாதுகாப்பு மையங்கள், பாதுகாப்பான மற்றும் குறைந்த செலவிலான மேம்பட்ட வசதிகள் உடைய பெண்கள் தங்கும் விடுதி ஆகியவற்றினை ஏற்படுத்துவதன் மூலம் பெண் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

ix. **கதிரொளி:** நடைமுறை மாற்றங்களுக்குரிய விழிப்புணர்வு திட்டங்களை நடைமுறைப் படுத்துவதன் மூலம் பெண்களின்

உரிமைகளை உறுதிப்படுத்தவும், மேம்பட்ட சமத்துவ சமுதாயத்தினை உருவாக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 2,00,000 மாணவிகளுக்கும் 6,000 பெண் தொழில் முனைவோர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி வழங்கவும் பணிபுரியும் பெண்களுக்கு மேம்பட்ட கட்டமைப்பு வசதிகளை வழங்கவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

## V. முடிவுரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த திராவிட மாடல் அரசின் கொள்கையானது இம்மாநிலத்தை தேசிய அளவில் முதல் இடத்தில் இடம் பெறச்செய்வது மட்டுமல்லாமல் சமூக பொருளாதார அளவுகோள்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு முன்னோடி மாநிலமாக உலகில் வளர்ந்த நாடுகளுக்கிடையே உயர்த்துவதேயாகும் எனப் பல்வேறு நிகழ்வுகளில் வலியுறுத்தியுள்ளார். நமது மாநிலம் முக்கிய வளர்ச்சி குறியீடுகளில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுள்ளதாக தேசிய அளவிலான முகமைகள் சமீபத்தில் வெளியிட்டுள்ள பல்வேறு குறியீடுகளில் தெரிவிக்கின்றன.

ஒன்றிய அரசின் பொருளாதார ஆலோசனைக் குழுவால் வெளியிடப்பட்ட சமூக முன்னேற்றக் குறியீடு 2023ல் (Social Progress

Index 2023) பெரிய மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாடு 63.33 புள்ளிகள் பெற்று தேசிய அளவில் முதலிடம் பெற்றுள்ளது. மூன்று அடிப்படை பரிணாமங்களான 1. அடிப்படை தேவைகள், 2. நல் வாழ்விற்கான அடித்தளம் மற்றும் 3. வாய்ப்புகள் ஆகிய அளவுகோள்களின் படி மாநிலத்தின் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. வணிகம் செய்வதை எளிதாக்குதல் குறியீடு (Ease of Doing Business Index) என்பது புதிய தொழில் தொடங்குவதற்கும் தொழில் வளர்ச்சிக்கும் உதந்த சூழ்நிலை இருப்பதற்கான ஒரு அளவுக்கோலாகும். வணிகம் செய்தலை எளிதாக்குதல் குறியீட்டில் பதினான்காம் இடத்தில் இருந்த தமிழ்நாடு, 2022ஆம் ஆண்டில் மூன்றாம் இடத்திற்கு பிரம்மாண்டமாக முன்னேறியுள்ளது.

நிதி ஆயோக்கின் (NITI AAYOG) ஏற்றுமதி தயார்நிலை குறியீடு 2022ன் (Export Preparedness

Index 2022) மூன்றாம் பதிப்பினை வெளியிட்டது. ஒருங்கிணைந்த பகுப்பாய்வுகளின் அடிப்படையில் வெளியிடப்படும் இக்குறியீடு ஏற்றுமதி தொடர்பான அளவீடுகளின் அடிப்படையில் மாநிலம் மற்றும் யுனியன் பிரதேசங்களின் வளர்ச்சி மற்றும் தேக்க நிலையைக் குறிக்கும். தமிழ்நாடு இந்தக் குறியீட்டில் 80.89 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாட்டின் ஏற்றுமதி தொடர்பான குறியீடுகளான, ஏற்றுமதி மதிப்பு, ஏற்றுமதி அளவு மற்றும் உலகளாவிய ஏற்றுமதியின் பங்கு ஆகியவை மாநிலம் முதலிடத்தில் வருவதற்கான காரணிகளாகும்.

பெரிய மாநிலங்களின் நிர்வாகத் திறமைகளான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதி காரணிகளின் அடிப்படையில் தமிழ்நாடு அரியானா மாநிலத்திற்கு அடுத்தபடியாக உள்ளதாக பெங்களூரில்

அமைந்துள்ள பொது விவகார மையம் வெளியிட்ட பொது விவகாரக் குறியீடு 2022ல் (Public Affairs Index 2022) தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் காரணமாகவே மாநிலம் மேற்குறிப்பிட்ட குறியீடுகளில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறி வருகிறது. திட்டங்களைக் கள அளவில் மற்றும் பல நிலைகளில் தொடர்ந்து கண்காணிப்பது மட்டுமே திட்ட இலக்குகளை அடைவதற்கும் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும், வழிவகை செய்யும். இது போன்ற கண்காணிப்பு முறைகள் தேசிய அளவில் வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படவுள்ள குறியீடுகளில் மாநிலம் முன்னணியில் இடம் பெறவும் மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்கு பார்வையான

மாநிலத்தை உலக அளவிலான தரத்திற்கு உயர்த்துவதற்கும் உறுதுணையாக இருக்கும். இத்துறை இத்தகைய கண்காணிப்புப் பணியினைத் தொடர்ந்து விழிப்புடனும் ஆர்வத்துடனும் செயல்படுத்தும்.

**உதயநிதி ஸ்டாலின்**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத் துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.